புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1942-ம் ௵ ஜூலை மீ 25௳ [ந. 105

பிரஸங்கம் CV.

## லத்தீன் அமெரிக்கா.

லத்தீன் அமெரிக்கா நேர்முகமாக இந்த யுத்தத்தில் ஈடுபடாதபோதிலும், நேசநாடுகளைப்போல் அதுவும் சிரமத்துக்குள்ளாகி இருக்கிறது. இப்பாகம் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அருகில் இருக்கிறது. ஆபிரிக்காவிலுள்ள டாகர் துறைமுகத்திலிருந்து அட்லாண்டிக் வழியாக அச்சுநாட்டினர் எளிதில் வரக்கூடிய இடத்தில் இருக்கிறது. அட்லாண்டிக்கிலுள்ள பிரிடிஷ் கப்பற்படை லத்தீன் அமெரிக்காவைப் பாதுகாத்து வருகிறது. ராஜ்ய வியவகாரங்களைப் பார்க்குங்கால் ஐரோப்பிய நாடுகளின் சம்பந்தம் அமெரிக்காவிலும் இருக்கிறது.

பொருளாதார சம்பந்தமாக இந்த யுத்தம் லத்தீன் அமெரிக்காவை அதிகம் பாதித்திருக்கிறது. ஐரோப்பா மாத்திரம் முற்றுகைக்குள்ளாகி இருப்பதாக நினைக்கவேண்டாம். லத்தீன் அமெரிக்காவிற்கும் சில தடையேற்பட்டிருக்கிறது. ஏனென்றால் சாமான்களை ஐரோப்பாவில் இறக்குமதி செய்ய முடியாத காலத்தில் அமெரிக்க சாமான்களை, பிரான்ஸ், ஸ்காண்டிநேவியா, பால்கன் நாடுகள் முதலிய இடங்களுக்கு ஏற்றுமதி செய்யமுடியாது. ஜெர்மனியுடன் பூரா வியாபாரம் நிறுத்தப்பட்டுள்ளது. கப்பல்கள் குறைவாக இருப்பதால் பிரிடனும் அதிகம் சாமான்களை வாங்குவதில்லை. லத்தீன் அமெரிக்க நாடுகள் பூராவும் காப்பிக்கொட்டை, தகரம், எண்ணெய், நைட்ரேட், தாமிரம், முதலிய சாமான்களின் ஏற்றுமதியால் பிழைக்கவேண்டியிருப்பதால் இச்சாமான்களை ஏற்றுமதி செய்ய முடியாத காரணத்தினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன.

லத்தீன் அமெரிக்காவில் ஐந்தாம்படை, ரகசிய சூழ்ச்சி, கிருத்திருமமான பிரசாரம் முதலியவைகளில் ஈடுபட்டவர்கள் இருக்கின்றனர். அத்தேசமெங்கிலும் ஜெர்மன் பள்ளிக்கூடங்களும், இளைஞர் சங்கங்களும், படைப்பகுதிகளும் ஏற்பட்டிருக்கின்றன. ஜெர்மானியருக்குச் சொந்தமாயும் உட்பட்டதுமாக சில பத்திரிகைகளும் இருக்கின்றன. ரகசியமான ரேடியோ நிலயங்களும் உண்டு. ஒவ்வொரு பாகத்திலும் அரசாங்கத்தாருக்கு எதிரிடையான கக்ஷி ஏற்பட்டிருக்கிறது. இக்கக்ஷிகளுக்கு ஜெர்மானியர் பொருளுதவி செய்கின்றனர். அச்சுநாட்டு விமான மார்க்கங்களும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இவைகளின் வழியாகத்தான் ஐந்தாம்படை வேலைகள் நடைபெறுகின்றன. L. A. T. I. என்பது முக்கியமான மார்க்கம். இது [பெர்லின்-ரோம், டாகர், நேடால் (பிரஸீல்)] இடங்களுக்குப்போகிறது. மற்றொன்று கோண்டார் (Condor) இது டியூட்ஸி லுப்தான்ஸா (Dutsche lufthansa)வினால் நடத்தப்படுகிறது. பிராங்கோஸ்பெயினில் வெற்றி பெற்றதிலிருந்து பெலாங்கியர்களின் (Falangist) நடமாட்டமும் இருந்து வருகிறது.

அமெரிக்கா சண்டையிலீடுபட்டதும் நிலைமை அதிக சிறுங்கலையாகி விட்டது. ஏனென்றால் தூரக்கிழக்கை ஜப்பான் வியாபித்துக்கொண்டதால் அமெரிக்கா விற்கு வரவேண்டிய ஸப்ளைகள் லத்தீன் அமெரிக்காவிலிருந்து பெறவேண்டிய தாயிற்று. இவையாவும் பனமா வழியாகத்தான் வரலாம். காரிபியன் கடலில் நீர்மூழ்கிகளின் தாக்குதல்கள் பலிக்காததால் அச்சு நாட்டினர் லத்தீன் அமெரிக்கக் கடலில் சஞ்சரிக்கிறார்கள்.

இவ்விதமாக உலகின் முற்ற பாகங்களைக் கவர்ந்து வரும் இந்த யுத்தம் லத்தீன் அமெரிக்காவையும் வியாபித்து வருகிறது. இருட்டு தேசம் என்று இது வரை கூறப்பட்ட இப்பாகத்தைப்பற்றி சில விவரங்கள் கொடுக்கப்படுகின்றன.

## அமைப்பு.

லத்தீன் அமெரிக்கா என்பது மத்திய, தென் அமெரிக்க பாகங்களில் இருக்கும் இருபது நாடுகள் ஒன்று சேர்ந்த பிரதேசமாகும். இவைகளில் பிரஸீல் என்பது மிகப் பெரியது. ஐக்கிய நாடுகளைக் காட்டிலும் பெரிது. அர்ஜென்டைனா என்பது மிகப் பணக்கார நாடு. பிரான்ஸைப்போல் ஐந்து மடங்குள்ளது. மிகச்சிறியது பெரு. இருந்தாலும் தென்ஆபிரிக்க நாடுகளைக் காட்டிலும் பெரிது. மெக்ஸிகோ உள்பட அடங்கிய மத்திய அமெரிக்க பாகம் ஸ்பெயினைவிடப் பெரியது. இவ்வளவு நாடுகளும் லத்தீன் அமெரிக்காவில் அடங்கியிருக்கின்றன.

இவ்வளவு நாடுகளும் நாம் நினைக்கும் விதமாக ஐரோப்பா, ஆபிரிக்காவிற்கு வெகு தூரத்தில் இல்லை. கிழக்கே நீட்டியிருக்கும் பாகம் ஆபிரிக்காவிலிருந்து 2,000 மைல் தூரம்தானிருக்கிறது. ரயோ டி ஜெனிரோ, போனஸ் அயர்ஸ் இவை இரண்டும் நியூயார்க்கைவிட லிஸ்பனுக்குத்தான் சமீபத்தில் இருக்கின்றன. மேற்கே அன்டிஸ் மலைகளால் சூழப்பட்டு டியரா டென் புயிகோ முதல் காரிபியன் கடல்வரை பரவியிருக்கின்றன. அமெஸான் நதி பாயும் உள்நாட்டுப் பிரதேசமும் பெரியது. லத்தீன் அமெரிக்காவில் தரை மார்க்கத்தைவிட விமான மார்க்கம் சுலபமானது.

## ஆக்கிரமணமும் குடியேற்றமும்.

இப்பாகத்தில் ஸ்பெயின் தேசத்தினர்தான் முதலில் குடியேறியது. இவர்களுக்கும் மெக்ஸிகோ, பெரு முதலிய நாட்டு வாசிகளுக்கும் சண்டை நடந்ததில் நவீன யுத்த முறையைக்கையாளும் ஸ்பெயின் தேசத்தினருடன் எதிர்த்துச் சண்டை செய்ய முடியவில்லை. ஆகவே குடியேற்றத்திற்குத் தடை ஏற்படவில்லை. அங்குள்ள இந்தியர்கள் சுரங்க கூலிவேலைகளில் நியமிக்கப்பட்டார்கள். பிறகு போர்ச்சுகீஸ்காரர்கள் பிரஸீலில் குடியேறினார்கள். அதன் பிறகு இதாலியர்களும் ஜெர்மானியரும் சென்றனர். அர்ஜென்டைனாவில் 30 சதவிகிதம் இதாலியரும், பிரஸீலில் 7,50,000 பேர்கள் ஜெர்மானியரும் இருக்கின்றனர். ஆசிய வாசிகள் இருபதாவது நூற்றாண்டில்தான் சென்றார்கள். பிரஸீலில் 2,00,000 ஜப்பானியர் இருக்கிறார்கள். இவர்கள் திட்டமாகக் குடியேறியவர்கள்.

## பிரிவினையிலும் ஒற்றுமை.

இவ்விதமாகச் சேர்ந்துள்ள லத்தீன் அமெரிக்க நாடுகளுக்குள், சமூகம், அரசியல் முன்னேற்றம், அமைப்பு, ஜாதி, ஜனத்தொகை முதலியவைகளில் வித்தியாசம் இருக்கிறது. லத்தீன் அமெரிக்கர் என்று தனிப்படையாக ஒருவரையும் சொல்ல முடியாது. ஒன்று பிரஸீல், அல்லது மெக்ஸிகோ நாடுகளைச் சார்ந்தவனாகச் சொல்லலாம். இருந்தாலும் அமெரிக்காவைச் சார்ந்தவன் என்ற உணர்ச்சி மாத்திரம் இருக்கிறது. புதிதாக அடையப்பட்ட ஸ்வதந்திரத்தின் பயனாகவேதான் இது ஏற்பட்டிருக்கிறது. இதனால் பொதுவான அக்கரைகள், லக்ஷியங்கள் இவைகளைப்பற்றிய நினைப்பு ஏற்பட்டிருக்கிறது.

## ஸ்பெயின் சாம்ராஜ்யம்.

அமெரிக்காவில் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்பெயின் சாம்ராஜ்யம் மூன்று நூற்றுண்டுகள் நீடித்திருந்தது. அதிகப் பெரிய ஆடம்பரத்துடன் ஆரம்பமான இந்த சாம்ராஜ்யம் ஒரு சமயத்தில் கலிபோர்னியாவிலிருந்து கேப் ஹார்ன் வரையிலும் பரவியிருந்தது. அதில் போர்ச்சுகீஸ் பிரஸீல் உட்படவில்லை. வட அமெரிக்காவில் பிரிடிஷாரின் குடியேற்றம் 19-வது நூற்றுண்டில்தான் ஏற்பட்டது. ஆனால் தென் அமெரிக்காவில் ஸ்பெயின் தேசத்தினரின் 16-வது நூற்றுண்டிலேயே ஆரம்பமாகிவிட்டது. ஸ்பெயினிலிருந்த மத்திய அரசாங்கத்தினால்தான் அரசாட்சி செய்யப்பட்டது. சட்டதிட்டங்கள் அதிக தாக்ஷிண்யமுள்ளவைகளாக இல்லாத போனாலும் மீறப்படவில்லை. வட அமெரிக்காவில் குடியேறிய இங்கிலீஷ்காரர்கள் சுய ஆட்சியைப்பயின்றதும் லத்தீன் அமெரிக்க வாசிகள் அரசாங்க சம்பந்தத்திலிருந்து விலக்கப்பட்டனர்.

## குபேர உலகம்.

பல வருஷங்களில் ஸ்பெயின் சாம்ராஜ்யமானது மிகப்பெரிய பணக்கார நாடாகி விட்டது. ஏனென்றால் உலகின் பல பாகங்களுக்கு ஸப்ளை சாமான்கள் அங்கிருந்து அனுப்பப்பட்டன.

## ஸ்வதந்திரம்.

டிரபால்கர் சண்டையில் பிரிடிஷாரின் கடலாதிக்கம் ஊர்ஜிதமானதாலும், ஸ்பெயினை நெபோலியன் படையெடுத்ததாலும், தெற்கு நோக்கி அமெரிக்க ஐக்கிய நாடுகள் முன்னேறியதாலும் ஸ்பானிஷ் அமெரிக்கப் புரட்சி உண்டாயிற்று. இது ஸ்பெயினின் ஆதிக்கத்தை மீறுவதிலேயே நோக்கமாக முடிந்தது. அதனாலேயே ஒரு முக்கிய சகாப்தமாயிற்று. புதிய உலகமே நிர்மாணமாயிற்று. மார்டின், பொலீவர் போன்றவர்களின் பெயர்கள் முன்னால் வந்தன. இவர்களுக்குச் சாதகமாக லார்டு கோக்ரேய்ன், ப்ரௌன் போன்ற பிரிடிஷ்காரர்களும் உதவினார்கள். பிரிடிஷாரின் உதவி அந்த புரட்சிக்கு அதிகம் இருந்தது. இதர ஐரோப்பியர் அதில் தலையிட முடியாதபடி பிரிடிஷ் கப்பற்படை செய்தது. காஸில்ரே பிரபுவும், ஜார்ஜ் கானிங் இவர்கள்தான் அந்த ஏற்பாட்டைத் தயாரித்தது. இவர்கள் பிரிடிஷ்காரர்கள். அந்தச் சமயத்தில்தான் ஜனாதிபதி மன்ரோ தனது பிரசித்தத் திட்டத்தை வழங்கினான். அதாவது அமெரிக்க நாடுகளை ஐரோப்பியருக்கு உட்பட்ட குடியேற்ற நாடுகளாக நினைக்கக்கூடாது என்பதுதான்.

## யாவருக்கும் பிரவேசம்.

அமெரிக்கப் புரட்சியையும், பிரெஞ்சுப் புரட்சியையும், அனுசரித்திருந்த லத்தீன் அமெரிக்காவின் ஸ்வதந்திர இயக்கம் நவீன சரித்திரத்திலேயே ஒரு முக்கிய அம்சமாக விளங்குகிறது. புதிதாக ஒரு தேசமே அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில் பிரிடிஷ்காரர்கள் அமெரிக்காவையும் ஐரோப்பாவையும் ஒன்று சேர்ப்பதிலேயே ஈடுபட்டிருந்தனர். அமெரிக்கர்கள் பிரிவினையையே விரும்பினார்கள். இவைகளின் பயனாக யாவருக்கும் சில உரிமைகள் கிடைத்தன. லத்தீன் அமெரிக்கா சம்பந்தப்பட்ட வரையில் ஐரோப்பியர்களின் மனஸ்தாபம் இல்லாமல் செய்ய முடியாத போயினும், யாவருக்கும் வியாபாரம், லேவாதேவி, குடியேற்றம் முதலிய ஸ்வதந்திரம் கிடைத்தது. ஜெர்மானியர் ஏராளமாகக் குடியேறினர். பிரிடிஷ், பிரெஞ்சு, ஜெர்மன் முதல்கள் போடப்பட்டன. பொது ஜனங்களுக்கு அதிகம் கடனாகவே கொடுக்கப்பட்டது.

## லத்தீன் அமெரிக்கா இதர தேசங்களோடு சேருகிறது.

அயல் தேசத்தினர் குடியேறியதாலும், அயல் நாட்டு முதல் உபயோகிக்கப்பட்டதாலும், இதர நாடுகளுடன் புதிய உடன்படிக்கைகள் செய்துகொள்ள வேண்டியிருந்ததாலும், லத்தீன் அமெரிக்க நாடுகள் இதர தேசங்களுடன் அதிகம் நெருங்கிப்பழக ஆரம்பித்தன. கப்பல் துறைமுகங்களும் இதர பொதுஜன சௌகரியங்களும் உண்டாக்கப்பட்டன. இதிலுள்ள எல்லா நாடுகளும் ஜன

நாயகத்தில் நம்பிக்கை கொண்டிருக்கின்றன. அச்சுநாட்டு ஏகாதிபத்தியக் கொள்கைகளை வெறுக்கின்றன. பொருளாதார முன்னேற்றத்தினால் தொழிலாளிகளின் கக்ஷி வலுத்திருக்கிறது. இவைகளின் பயனால் சில சமஉரிமைக் கொள்கைகளின் அம்சங்களும் தலைகாட்டி வருகின்றன. லாநிஸியன், லாபிரம்ஸா என்பவை பிரசித்த பத்திரிகைகள். மான்டிவிடியோ என்பது ஜெனிவாவிற்கு சமமாக பாவிக்கப்பட்டு ஸர்வதேசக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. அமெரிக்கப் புதிய சட்டம் (New Deal) முதல் முதலாக உருகுவேயில்தான் வழங்கப்பட்டது. இதன் வியாபாரமும் ஜனத்தொகையும் இரட்டிப்பு மடங்காக ஆகியிருக்கிறது. பிரஸீலில் அரசனுக்கு அடங்கிய ஜனநாயகம் விளங்கிற்று. அதிகம் படித்தவரான இரண்டாவது பீட்ரோ சக்கிரவர்த்தியின் காலத்தில் பிரஸீல் நன்றாகக் கியாதியடைந்தது. தற்சமயத்தில் ஜனாதிபதி வார்கஸ் என்பவனின் கீழ் இருக்கிறது. இவர் ஏகாதிபத்தியக் கொள்கையின்படி (Totalitarianism) நடந்துகொண்டாலும் ஐரோப்பாவில் காணப்படும் நாஸிக்கொள்கைகளின் கெடுதிகள் இங்கே இல்லை. பிரஸீலின் சமூகம், பொருளாதாரம் இவைகளைச் சீர்படுத்தவே அதன் விளைபொருளகள் உபயோகிக்கப்படுகின்றன.

அரசியல், சமூகம், ஜாதி, பொருளாதாரம் இவைகள் சம்பந்தமான பரீக்ஷைகளை நடத்துவதற்கு லத்தீன் அமெரிக்கா தகுந்த இடமாகக் காணப்படுகிறது. ஷில்லியில் சமூக சீர்திருத்த சம்பந்தமான இயக்கம் இருக்கிறது. உருகுவேயில் அரசியல், சமூகம் இவை சம்பந்தமான புதிய கல்பனைகள் செய்யப்படுகின்றன. பொலீவியாவிலும் பெருவிலும் அங்கிருந்த இந்தியர்கள் முன்னேற்றத்தையடைந்து வருகிறார்கள். மெக்ஸிகோவில் சமூக சம்பந்தமான உண்மை மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இங்கு நடந்த புரட்சியானது குடியானவனுக்கும் தொழிலாளிக்கும் நன்மையைச் செய்யும் நோக்கத்துடன் நடந்தேறியது. ருஷ்யப் பொதுவுடமைப் புரட்சிக்கும் எழுவருடங்கள் முன்னதாகவே இது நடந்தது. ருஷ்யப் புரட்சியைக்காட்டிலும் வேறுபட்டது. ஏனென்றால் ஜனாதிபதி வார்காஸ் தயாரித்த 'எஸ்டாடோ நோவோ' என்பது இதாலிய பாஸிஸ்டு கொள்கையை ஒத்தது. மெக்ஸிகோவில் பிரத்தியேகமான பொருளாதார நிலையிருக்கிறது. ஜனநாயக தேசமாகவும் இருக்கிறது. 1940-ல் அவிலா கமாஷோ ஜனாதிபதியானது முதல் மெக்ஸிகோவில் மெக்ஸிகோ வாஸிகளுக்குப் பிராதான்யம் கொடுக்கும் இயக்கம் ஏற்பட்டிருக்கிறது.

## பொருளாதார முன்னேற்றம்.

இவ்வுலகத்தில் லத்தீன் அமெரிக்காவில் தான் அதிக மூலப்பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பொலீவியாவில் தகரமும், வெனிஜுலாவில் எண்ணெயும், மெக்ஸிகோவில் உலோகமும், எண்ணெயும், ஷில்லியில் நைட்ரேட்டும், தாமிரமும், கொலம்பியாவில் காப்பிகொட்டையும், பிரஸீலில் சர்க்கரை, காப்பிக்கொட்டை, ரப்பர், பருத்தி முதலியவைகளும் உண்டுபண்ணப்பட்டு வியாபாரம் நடக்கிறது. அர்ஜென்டைனாவில் தானியமும், மாட்டு இறைச்சியும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

பொதுவாக இங்கே ஏற்றுமதியாவதில் 40 சதவிகிதம் ஐரோப்பாவிற்குச் செல்லுகின்றன. இருந்தாலும் பிரஸீலுக்கு வடக்கிலுள்ள பாகத்திற்கும் தெற்கிலுள்ள பாகத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது. காரிபியன் கடலுக்கு அருகிலுள்ள நாடுகள் அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் வியாபார சம்பந்தம் வைத்துக்கொண்டிருக்கின்றன. தெற்கிலுள்ள நாடுகள் ஐரோப்பாவுடன் வியாபாரம் செய்துவருகின்றன.

## லத்தின் அமெரிக்காவிற்குப் பொருளாதார ஸ்வதந்திரம்.

இந்த யுத்தம் ஆரம்பமானதும் லத்தீன் அமெரிக்க வியாபாரம் தடைப்பட்டது. ஏனென்றால் ஐரோப்பிய நாடுகளுடன் வியாபாரம் செய்ய முடியவில்லை. இதனால் அங்கு ஏராளமாக மிஞ்சிப்போகும் சாமான்களை அனுப்பும் பிரச்னை உண்டாயிற்று. உடனே பொருளாதார ஸ்வதந்திரத்தைக் கொண்டாடியது. இதற்காக அயல் நாடுகளுக்குத் தேவையான சாமான்களைச் செய்யத் தொழிற்சாலைகள் ஸ்தாபிக்கப்படுகின்றன.

## அமெரிக்க நாடுகளை ஒன்று சேர்ப்பது.

தங்கள் வியவகாரங்களைத் தீர்த்துக்கொள்ளும் சக்தி ஏற்பட்டதும் எல்லா அமெரிக்க நாடுகளையும் ஒன்று சேர்க்கும் உணர்ச்சி பரவி வருகிறது. இது 1826-ல் பனாமா மகாநாட்டில் பொலீவர் ஆரம்பித்தார். கொஞ்சம் கொஞ்சமாக, 1889-க்கும் 1928-க்கும் இடையில் நடந்த மகாநாடுகளில் அபிவிருத்தியடைந்தது. இந்த யுத்தத்தில் அமெரிக்கா சேர்ந்ததும் சில நாடுகள் அதன்படி நடக்க ஆரம்பித்தன. சில நாடுகள் ஜெர்மனியுடன் ராஜ்ய நட்பை முறித்துக்கொண்டன.

ஜனாதிபதி ரூஸ்வெல்டு தனது தீர்க்கத் திருஷ்டிக்குத் தகுந்தாற்போல் 'அயலார்களுடன் நட்பு' என்ற திட்டத்தை அறிவித்தார். இதன்படி மற்ற நாட்டு அரசாங்கங்களுக்கு சம அந்தஸ்து கொடுக்கப்படும். மற்ற நாடுகளில் நிறுத்தப்பட்டிருக்கும் அமெரிக்க சைனியத்தை திருப்பியழைத்துக்கொள்ளப் படும். இந்தத் திட்டங்களுக்கு நல்ல பலன் கிடைத்தது. 1940-ல் அச்சுநாட்டு பயத்தைத் தடுப்பதற்கான திட்டத்தை லத்தீன் அமெரிக்கா ஒப்புக்கொண்டது. அமெரிக்க நாடுகளை பிறர் அடையாமலிருப்பதற்கான ஏற்பாட்டையும் அங்கீ கரித்தது. இதற்குத் தகுந்த தந்திர முறைகள் கையாளப்படுகின்றன. 'அமெரிக்கப் பாதுகாப்பு' சம்பந்தமாக எல்லா நாடுகளின் பொருளாதாரம், ராணுவம், கப்பல் படை இவைகளை ஒன்றுசேர்க்க ஒப்புக்கொண்டன.

கடந்த டிஸம்பர் மாதத்தில் ரியோ டி ஜெனிரோவில் கூடிய 21 நாடுகள் பின்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றின. முதலாவதாக இதில் சேர்ந்துள்ள எந்த நாட்டை ஆக்கிரமணம் செய்தாலும் மற்ற நாடுகளையும் செய்த மாதிரிதான். இரண்டாவதாக ஒவ்வொருவருடைய பத்திரத்தை முன்னிட்டு பரஸ்பரம் உள்ள நட்பு அதிகமாகப் பாவிக்கப்படும். மூன்றாவதாக அந்த நாடுகளின் உள்நாட்டு சட்டதிட்டங்களுக்குத் தகுந்த விதமாக நடந்துகொண்டு ஜப்பான், இதாலி, ஜெர்மனி இவைகளுடன் உறவை ரத்துச்செய்து கொள்ளவேண்டும். நான்காவதாக மறுபடி சிநேகம் ஏற்படுத்திக்கொள்ளும்போது இதர நாடுகளையும் கலந்து கொள்ளவேண்டும்.

இவ்விதமாக லத்தீன் அமெரிக்க நாடுகள் அமெரிக்காவிற்கு நெருங்கியிருக்கும் ஆபத்தைத் தவிர்த்து, வெற்றியை முன்னிட்டு ஒன்று சேர்ந்திருக்கின்றன.

கடைசியாக கப்பல் தினக்கொண்டாட்டத்தின்போது லத்தீன் அமெரிக்கா விற்கு வந்துள்ள நாஸி பயத்தைப்பற்றி ஜனாதிபதி ரூஸ்வெல்டு சொன்ன மொழி களுடன் முடிப்போம்:—

'அட்லாண்டிக் கடலுக்கு அப்பால் தனக்கு ஆக்கிரமண ஆசை கிடையா தென்று ஹிட்லர் பல தடவை சொல்லியிருக்கிறான். ஆனால் அவனது நீர்மூழ்கி களும் விமானங்களும் மாறுபாடாக நடந்துகொள்ளுகின்றன. நாஸிப் புது திட்டமே இப்படித்தான்.

'ஹிட்லரின் அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்ட ரகசியப் படம் ஒன்று என் வசத்திலிருக்கிறது. அதில் மத்திய அமெரிக்காவின் ஒரு பாகத்தையும் தென் அமெரிக்காவையும் ஹிட்லர் சீர்திருத்தப்போகிறானாம்.

'இந்த பாகத்தில் தற்போது 14 நாடுகள் இருக்கின்றன. பெர்லின் பூகோள சாஸ்திரிகள் தென் அமெரிக்க எல்லைப் பிரிவினைகளைப் போக்கடித்து தென் அமெரிக் காவை 5 சிறிய நாடுகளாகப் பிரித்து தங்களது ஆளுகைக்குட்படுத்தியிருக் கின்றனர். இதோடு பனாமா ஜனநாயகத்தையும், பனாமா கால்வாயையும் சேர்த் துக்கொண்டிருக்கிறார்கள்.

'நாம் எவ்வளவோ நாடுகளை எதிர்த்து நின்றிருக்கிறோம். அதாவது கடல், காடு, பாலைவனம், சமவெளிகள், பொட்டல்கள், சமூகம், பொருளாதாரம், அமைப்பு முதலியவைகள் சம்பந்தமாகப் பலவிதக் கஷ்டங்களையனுபவித்து இருக்கிறோம்.

'தற்சமயத்தில் நம்மைப்பற்றி செய்துள்ள எதிரியின் முயற்சிக்குத் தகுந்த படி நாம் நமது யுத்த நிலயங்களை ஏற்படுத்தியிருக்கிறோம்.'

# வார யுத்தச் செய்திகள்.

## 18—7—42-லிருந்து 24—7—42-வரை.

**எகிப்து.**—எல் அலமீனுக்கு மேற்கே மத்திய முனையில் சண்டை செய்து கொண்டிருந்த பிரிடிஷ் துருப்புகள் எதிரி வரிசைகளைப் பிளந்துகொண்டும், எதிரிகளைப் பின்புறமாகத் தள்ளிக்கொண்டும் முன்னேறின. இவ்விஷயத்தை இதாலிய ஸர்க்கார் அறிக்கையே ஒப்புக்கொள்ளுகிறது. வியாழனன்று 7 மைல் முன்னேறின. ருவிஸெப் பீடபூமியுள்ள நிலயங்களைத் தாக்கிய எதிரிகள விரட்டியடிக்கப்பட்டனர். அதனால் நேசதேசத் துருப்புகள் சொற்ப தூரம் முன்னேற முடிந்தது.

வடக்குப் போர்முனையில் சண்டை பிரமாதமாயிற்று. டெல்எலிஸாவை எதிரி மாறி மாறி பிடிப்பதும், விட்டுவிடுவதுமாக இருந்தான். இப்பொழுது அது நம் வசத்திலிருக்கிறது. மேலும் எல் மாக்ராட் (El Makhrhad), ரூயன் (Ruin) இவை களையும் எதிரி தாக்கினான். அவைகள் இப்பொழுது நேசதேசத்தார் வசத்தில் இருக்கின்றன.

சென்ற ஞாயிற்றுக்கிழமையிலும், திங்கட்கிழமையிலும் சண்டையில் ஓய்வு ஏற்பட்டிருந்தது. இருதரப்பார்களும் கடும்போருக்குத் தயாரித்துக்கொண்டிருந் தார்கள். மண் மாறி பெய்ந்ததால் ஆகாய விமானங்களின் நடமாட்டமில்லை. செவ்வாய்க்கிழமை பொழுது போகும் நேரத்தில் புதிய யுத்தம் ஆரம்பித்தது. எல்லாப் பகுதிகளிலும் தளகர்த்தர் ஆசின்லெக் டாங்கிகளைக்கொண்டு தாக்கினார். வடக்குப் பகுதியில் அவர் முன்னேறியதின் பயனாக டெல் எல்லிஸா பாலம் பூராவும் இப்பொழுது பிரிடிஷார் கைவசமாகிவிட்டது. தெற்குப் பகுதியிலும் சில பாகத்தில் நமக்கு அனுகூலம் கிடைத்திருக்கிறது. எதிரி நம்பிக்கை இழந்து ஆக்கிரமிப்பைத் தடுத்து வருகிறான்.

ஆகாயத்திலும், சமுத்திரத்திலும் தாக்குதல்கள் அதிகரிப்பதினால் எதிரி ஸப்ளைகளை பெங்காஸி, டொப்ரூக், பார்டியா, பாம்பா, மெர்ஸாமாட்ரூ, பூகா (Fuka) கிரீட்டின் சமீபத்திலுள்ள ஸுடாக்கடல் முதலிய இடங்களுக்குக் கொண்டு சேர்க்கமுடியவில்லை. ஆபிரிக்கக் கடற்கரைக்கு வந்து கொண்டிருந்த அச்சு நாட்டு சாமான் கப்பல்கள் மீது அமெரிக்க விமானங்கள் 21 தடவைகள் தாக்கின.

**ருஷ்யா.**—(*a*) வாரனேஷைக் கைப்பற்றவோ, அல்லது வளைத்துக்கொள் ளவோ, அல்லது அதைக் கடந்து செல்லவோ நாஸிகள் செய்த முயற்சி பலிக்க வில்லை. தற்காப்புப் பள்ளங்களை வெட்ட எத்தனித்தும் முடியவில்லை. அதற்கு அருகாமையிலுள்ள இரண்டு கிராமங்களிலிருந்தும் ஜெர்மானியர் வெளியேறும்படி செய்யப்பட்டார்கள். நதியைக் கடப்பதற்கான முக்கிய ரஸ்தா துண்டிக்கப் பட்டது. வாரனேஷுக்கு வடமேற்கில் ஒரு இடத்தில் ஸோவியத் துருப்புகள் எதிரி வரிசைகளைப் பிளந்துகொண்டு சென்றதாகவும் சொல்லப்படுகிறது. இருந்தாலும், இங்கு நிலைமை மிகவும் நெருக்கடியாகயிருக்கிறது என்றும், எதிரி களுக்குக் கஷ்டம் அதிகரித்துவருகிறதென்றும் சமீபத்தில் வெளிவந்த மாஸ்கோ அறிக்கை கூறுகிறது.

**டான்நதி தீரத்தில்** கோரமான யுத்தம் நடக்கிறது. ருஷ்யர்கள் வெற்றி கரமாக வாபஸ் வாங்கமுடியாதபடி, நாஸிகள் கிரீட்டில் நடந்துகொண்டதுமாதிரி பாராசூட்கள் மூலமாக அங்கு துருப்புகளை ஏற்றி அனுப்புகின்றனர். பின் பக்கத் தில் சண்டையிடும் ருஷ்யத் துருப்புகள் தங்கள் தற்காப்பு ஸ்தலத்திற்குப் பின் வாங்குகின்றனர், மில்லிரோவோ, வோரோஷிலோகிராட் இவ்விரண்டு இடங் களையும் ருஷ்யர்கள் காலி செய்துவிட்டனர். ரோஸ்டாவ் வரையில் எதிரி முன்னேறியிருக்கிறான். ரோஸ்டாவுக்கு கிழக்கு, வடகிழக்கு திசையிலுள்ள 120 மைல் தூரத்துள்ள ஸைமில்யான்ஸ்க்காயா (Tsymlyanskaya) என்ற இடத்திலும்,

ரோஸ்டாவுக்கு வடக்கே 20 மைல் தூரத்திலுள்ள நோவோசெர்ஹாஸ்க் என்ற இடத்திலும் கொடிய யுத்தம் நடப்பதாக அறிவிக்கப்படுகிறது.

தற்போது நடக்கும் போரில் ருஷ்யாவின் ஜீவநாடியான மார்க்கங்களைப் பாதுகாப்பதுதான் முக்கிய பிரச்னையாக இருக்கிறது. மாஸ்கோவிலிருந்து ஆஸ்ட்ரகான் வரையிலும் ஒரு இருப்புப் பாதையும், மற்ருென்று மாஸ்கோவிலிருந்து ஸ்டாலின்கிராடுக்கும், காஸ்பியன் கடற்கரைக்கும் செல்லுகின்றன. ஜீவனுடி போன்ற இம்மார்க்கங்கள் நாஸி விமானங்களுக்கு இலக்காக இருக்கின்றன. வோரோஷிலோவ்கிராடுக்கு தெற்கேயுள்ள யுத்தப் பிரதேசத்தில் சண்டை வரவர விஸ்தாரமாகிக்கொண்டுவருகிறது.

பால்டிக் கடலிலும், பாரன்ட்ஸ் கடலிலும் ஸோவியத் நீர்மூழ்கிகளும், விமானங்களும் ஜெர்மனியின் சாமான் கப்பல்களைத் தாக்கிவருவதால், அங்கு எதிரிக்கு துணைக்கப்பல்கள் அனுப்பவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இந்த வாரத்தில் எதிரிக்குச் சொந்தமான 5,000 டன், 8,000டன் நிறையுள்ள இரண்டு துருப்பேற்றிக் கப்பல்கள், 3 பீரங்கி படகுகளும், ஒரு கவசம்பூண்ட படகும் மூழ்கடிக்கப்பட்டது.

கொயனீக்ஸ்பர்க் (கிழக்குப் பிரஷ்யாவில்) என்ற நகரம் இந்த வாரத்தில் ருஷ்ய வெடி விமானங்களால் இருமுறை தாக்கப்பட்டது.

**சைனு.**—சீனர்கள் கிழக்கு கியாங்கிலுள்ள டிஸிங்டன், ஜுயான், ஹெங்பெங், இவைகளை மீண்டும் கைப்பற்றிக்கொண்டனர். இன்னும் கியாங்ஸியின் கிழக்குப் பாகத்திலுள்ள ஸ்யோடன் (Tsaoton), ஸின்யுங் (Tsinung), ஸாடுவான் (Satuan) முதலிய இடங்களையும் எதிரிகளிடமிருந்து பிடுங்கிக்கொண்டனர். இந்த வாரத்தில் கிங்கி (Kinki), ஸென்சாங்கியாண்சிங்சௌ வின்ச்வான் முதலிய இடங்களைச் சீனர்கள் திரும்பப் பிடித்துக்கொண்டதாக தகவல் கிடைத்திருக்கிறது. சீனர்கள் திரும்பப் பிடித்துக்கொண்ட வின்ச்சௌவை (Wenchow) ஜப்பானியர் மீண்டும் கைப்பற்றிக்கொண்டனர். சைனுவிலுள்ள அமெரிக்க விமானங்கள் பூச்சௌ (Foochow)வுக்கு அருகாமையில் சென்றுகொண்டிருந்த சுமார் 2,000-டன் நிறையுள்ள 2 எதிரிக் கப்பல்களைத் தாக்கி மூழ்கடித்தன. கான்டன், ஹாங்கௌ இவ்விடங்கள் மீதும் குண்டுகள் வீசின. ஜப்பானிய தளங்கள் மீது விமானத் தாக்குதல்கள் கூடிய சீக்கிரத்தில் அதிகரிக்குமென்று அமெரிக்கச் சைனியத்திற்கு உதவியாக சைனுவில் வந்திருக்கும் விமானப் படையின் தலைவர், ஜெனரல் ஹெயின்ஸ் சொன்னுர். தற்சமயம் நடந்துவரும் விமானப் போரில் இனிமேல் ஜப்பானிய விமானங்கள் முன்னேறித்தாக்க முடியாமல் போய்விட்டதென்றும், தற்காப்பு செய்து கொள்வதில்தான் ஈடுபடவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டதென்றும் பிரிடிஷ் விமானப்படைத் தலைவர், ஜெனரல் ஷெனுல்ட் அபிப்பிராயப்பட்டார்.

**பர்மாவில்** விஸ்தாரமான பல வேறு இடங்களில் தாக்குதல்கள் நடந்தன. முக்கியமாக மாயூகுடாவிலுள்ள ப்ாலெட்வா, க்வாஸான் முதலிய இடங்கள்மீது வெடிகுண்டுகள் வீசப்பட்டன. சின்ட்வின் நதிக்கரையில், கலேவா தளத்தில் பெருந்தீக்கள் மூட்டப்பட்டன. மேலும் மியிட்டா நதிக்கரையிலிருக்கும் கியிகான் (Kyigon), கலாடின் நதிக்கரையிலுள்ள ஸெபாட்டா டாக்கான், டோமா மியான்க் (Htoma Myauk), ஆயிஸ்ட்ர் தீவு முதலிய இடங்களும் தாக்கப்பட்டன. ஆக்கியாபிலேயே முக்கிய ராணுவ லக்ஷியங்கள் வெடிகுண்டுகளுக்கு இலக்காகின. ஆக்கியாப்புக்குத் தெற்கே, கியான்க்பியூ என்னுமிடத்திலுள்ள கப்பல்கள் வெடிகுண்டுகளாலும் யந்திர பீரங்கிகளாலும் தாக்குண்டன.

**பஸிபிக்.**—அலூஷியன் தீவுகளில் பாதுகாப்பில்லாத தீவுகளான அட்டுவாக் (Attuag), அகெட்டு (Agattu) இவ்விரண்டிலும் ஜப்பானியர்கள் வியாபித்துக் கொண்டு, டச்சுத் துறைமுகத்தையும், கிளன்கோட்டையையும் விமானங்களைக் கொண்டு தாக்கினுர்கள். அமெரிக்க விமானங்கள் கிஸ்கா என்னுமிடத்திலுள்ள கட்டடங்களைத் தாக்கித் தகர்த்தன. அமெரிக்க நீர்மூழ்கிகள் மூன்று ஜப்பானிய நாசகாரிகளைக் கிஸ்காவுக்கு அருகாமையில் மூழ்கடித்தன.

பாபுவா வட சமுத்திரக்கரையிலிருக்கும் பர்ஞ என்ற இடத்தில் 1,500 முதல் 2,500 வரை படைத்துருப்புகளை ஜப்பானியர் இறக்கியிருக்கிறார்கள். தெற்கே 125 மைல்களுக்கு அப்பாலிருக்கும் மோர்ஸ்பி துறைமுகத்திற்கு இதனால் புதிதாக அபாயம் ஏற்பட்டிருப்பதாகத்தோன்றுகிறது. துருப்புகளை இறக்கும் பொழுது ஆஸ்திரேலியர்கள் எதிரிகளுக்கு பெருத்த சேதம் விளைவித்திருக்கிறார்கள். எதிரியின் துருப்பேற்றிக்கப்பல் ஒன்றும், படகு ஒன்றும் மூழ்கடிக்கப்பட்டன.

**பிரிடிஷ் விமானப்படை.**—வடமேற்கு ஜெர்மனி, ஹாலந்து, பிரெஞ்சுக் கடற்கரை பெல்ஜியம் இவைகளிலுள்ள முக்கிய இடங்களான லூபெக்பிளன்ஸ்பெர்க், எம்டன், செர்பர்க் முதலியவைகளை இடைவிடாது தாக்கியது.

1. **கப்பற்படை.**—ஸ்வீடிஷ் செஞ்சிலுவை சங்கத்தாரால் அமர்த்தப்பட்ட 1,584 டன் நிறையுள்ள ஸ்ரோபார்க் என்ற கப்பல் மத்தியதரைக்கடலில் சென்று கொண்டிருக்கும்பொழுது விமானத்தாக்குதலினால் மூழ்கடிக்கப்பட்டது. அக் கப்பல் 3,000 டன் நிறையுள்ள கோதுமையை கிரீஸுக்கு ஏற்றிச்சென்றது. அது திரும்பிவரும்பொழுது வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டது. ஜெர்மனி, இதாலி இவ்வரசாங்கங்கள் அதைப் பாதுகாப்பதாக உறுதி சொல்லியும்கூட அக்கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.

2. துருக்கிக்குச் சொந்தமான 1,200 டன் நிறையுள்ள மிகவும் பெரிய நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று சானக் (Chanak)குக்கு அருகாமையில் ஏதோ காரணத்தால் மூழ்கடிக்கப்பட்டது.

1. **நாஸி புதுதிட்டம்.**—ஹாலந்தில் ரகசிய கலகங்கள் மீண்டும் நடந்ததால் பிணையாளிகளின் உயிரை வாங்கப்படுமென்று ஜெர்மன் கமாண்டர் சொல்லியிருக்கிறான். ஆடன்வான் டேனிகர்டன் என்பவன் ஹாலந்து தேசத்தில் ஒரு கவி பாட்டுக்களும் பாடுவான். அவன் கிப்ளிங்கைப்போலுள்ளவன். அவன் உயிரையும் வாங்கப்படுவதாகப் பயமுறுத்தப்பட்டிருக்கிறான்.

2. **யூகோஸ்லாவியாவில்** ஜெர்மன் படகுகளும், ஹங்கேரியப்படைகளும் ஜெனரல் மிஹயலோவிட்சியின் கலகத்தை அடக்க அனுப்பப்பட்டது. இக்கலகம் டான்யூப் பூராவிலும் பரவியிருக்கிறது. யூகோஸ்லாவிய கொரில்லாப் படைகள் கான்ஜிகா (Konjica) நகரினுள் பிரவேசித்துள்ளன. ஸரஜெவோ (Sarajevo), மாஸ்டல் (Mostal) இந்நகரங்களிலிருந்து ஜெர்மானியர் விரட்டப்பட்டனர். இவை இரண்டுக்கும் இடையில் 12-மைலுக்கு இருப்புப்பாதை அகற்றப்பட்டது.

3. ஜிரீர்ஜ் (Zrierz) என்ற இடத்தில் ரகசியப் போலீஸ் ஏஜெண்டுகளைக் கொலை செய்ததற்காக 7,000 போலந்துகாரர்கள் பிடிக்கப்பட்டு, 100 பேர்கள் கொல்லப்பட்டனர். இதில் 96 பேர் புருஷர்கள், நாலு ஸ்திரீகள். இதில் வைத்தியர்களும், பத்திரிகை நிருபர்களும், இரண்டு பாதிரிமார்களும் அடங்கியிருக்கின்றனர்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **13—7—42.** (திங்கட்கிழமை). | | | | |

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்).

இரவில்.—ஒரு பெரிய துறைமுகம்—
டுயிஸ்பர்க் (Duisberg).

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 13—7—42. (திங்கட்கிழமை).—தொடர்ச்சி. | | | | |
| | **லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | விமானமிறங்குமிடங்கள்—எல்டாபா (Eldaba). | | | |
| | டாங்கிகளின் கூட்டம்—ஏராளமான வண்டிகள்—எல்டாபா (Eldaba)விலிருந்து எல் அலமீன் (El Alamein) பிரதேசம் வரையிலுள்ள பிரதேசத்தில் | | | |
| | **ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்).** | | | |
| | விமானச் சண்டைகள்—போர்முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு–அலோர் தீவுகள் (Alor Islands)–(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | கப்பல் துறையிலுள்ள கட்டடங்கள், கப்பல்கள்—கலாபாகி (Kalabahi). | ஒரு சிறு கப்பல் மூழ்கிற்று. | | |
| | **தூரக்கிழக்கு–நியூ கினி (New Guinea)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | விமான நிலயம்.—ஸலாமூவா (Salamaua). | | | |
| 14—7—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | இரவில்.—விரோதிக் கடல்களில் சுரங்க வெடிகள் போடுவது. | | | |
| | **லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | ஏராளமான எதிரி டாங்கிகளும், துருப்புகளும்—எல் அலமீன் (El Alamein) பிரதேசத்தில். | | | |
| | டொப்ருக்—(Tobruk). | | | |
| | **ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்).** | | | |
| | விமானச் சண்டைகள்—போரரங்கம் முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு நியூ கினி (New Guinea)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | வேவு பார்த்தல்.—ஸலாமூவா (Salamaua). | | | |
| 15—7—42. (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | பகலில்.—ஜெர்மானியர் முகாம்கள் பீரங்கி ஸ்தானங்கள், துருப்புகள், மற்ற லக்ஷியங்கள்.—டியப் (Dieppe)பிலிருந்து ஈடபிள்ஸ் (Etables) வரையுள்ள பிரான்ஸின் கடற்கரை. | | | |
| | விமான எதிர்ப்புகள்.—செர்பர்க் (Cherbourg), பொலாயின் (Boulogne) பிரதேசங்களில். | | 4 விமானங்கள். | 3 விமானங்கள். |
| | இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **15—7—42.** | (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | கப்பல் துறைகளிலுள்ள கட்டடங்கள், கப்பல்கள்—பெங்காஸி (Benghazi) துறைமுகம். | பெருந்தீக்கள் கிளம்பின. | 1 விமானம். | 7 விமானங்கள். |
| | விரோதி டாங்கிகள், கவசம் பூண்ட வண்டிகள்—விரோதியின் முன்னணி சைனியங்களுக்குப் பின்னால். | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—போர் முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு (Far East)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | கலீவா (Kalewa), மியிட்டகா (Myittha). படகுகள்—கெலிமியோ (Kalemyo). | | | |
| **16—7—42.** | (வியாழக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—தொழிற்சாலைகள், ராணுவ லக்ஷியங்கள்—ரூர் (Ruhr) வடமேற்கு ஜெர்மனி (Germany) ரயில் வண்டிகள் நிற்குமிடங்கள் இன்னும் மற்ற லக்ஷியங்கள்—பிரெஞ்சுக் கடற்கரையில். | | 1 விமானம். | |
| | சாயந்திரம்—நீர்மூழ்கி கட்டுமிடங்கள்—லூபெக் (Lubeck). கப்பல் கட்டுமிடங்கள்—பிளன்ஸ் பர்க் (Flensburg). | | 2 விமானங்கள். | |
| | இரவில்—சுரங்கவெடிகள் போடுவது—விரோதிக் கடல்களில். | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ராணுவ லக்ஷியங்கள்—விரோதி சைனியங்களுக்குப் பின்புறம். | | | |
| | போக்குவரத்து வண்டிகளின் கூட்டம்—எல்டாபா (El Daba) பிரதேசத்தில். | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்—யுத்தப் பிரதேசம் முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ பிரிடன் (New Britain)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | கப்பல் துறையிலுள்ள கட்டடங்கள், கப்பல்கள்—ராபால் (Rabaul) துறைமுகம். | | | |
| | **தூரக்கிழக்கு—டிமோர் (Timor)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | வேவுபார்த்தல்.—தீவிலுள்ள ராணுவ லக்ஷியங்களின்மேல். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங் களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **16—7—42.** (வியாழக்கிழமை).—தொடர்ச்சி. | | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | விமான நிலயம்—ஆக்கியாப் (Akyab). | | | |
| | ஆய்ஸ்டர் தீவு (Oyster Islands). | | | |
| **17—7—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—சுரங்க வேடி போடுவது—விரோதிக் கடல்களில். | | | |
| | விமான நிலயங்கள்—ஆக்கிரமித்த பிரான்ஸ் (France). | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகம், கப்பல்கள்.—டொப்ருக் (Tobruk). | | | |
| | கப்பல்கள்.—பாம்பா (Bomba) குடாவிலும், பார்டியா (Bardia)விலும். | | | |
| | பெட்ரோல் கிடங்குகள்.—மெர்ஸா மாட்ரூ (Mersa Matruh). | | | |
| | விரோதிக் கூட்டங்கள்—எல் ஆலமீன் (El Alamein) பிரதேசத்தில் முன்னணிகளுக்குப் பின்புறம். | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள்—போர்முனை எங்கும். | | | |
| | **தூரக்கிழக்கு—ஸாலமன் (Solomon) தீவுகள்**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—கீடா (Kieta). | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | வேவு பார்த்தல்—விரோதி ஆக்கிரமித்த பிரதேசத்தில். | | | |
| | **சைனு (China)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஜப்பானியக் கப்பல்கள்—ஹான்கௌ (Hankow). | | | |
| **18—7—42.** (சனிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—ராணுவ லக்ஷியங்கள்—ரூர், வடமேற்கு ஜெர்மனி (Germany). | | | |
| | விரோதி துணைக்கப்பல் கூட்டம்—செர்பர்க் (Cherbourg) தீபகற்பத்திற் கருகாமையில். | 1 கப்பல் மூழ்கிற்று. | | |
| | இரவில்—சுரங்க வேடிகள் போடுவது—விரோதிக் கடல்களில். | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—முன்னணிப் பிரதேசங்களில்-டொப்ருக் (Tobruk). | பெருந் தீக்கள் கிளம்பின. | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்—யுத்தரங்கம் முழுவதிலும். | இவ்வாரத்தில் ஜூலை 11-18 வரை நேர்ந்த நஷ்டம். | 137 விமானங்கள். | 211 விமானங்கள். |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|

**18—7—42.** (சனிக்கிழமை)—தொடர்ச்சி.

**தூரக்கிழக்கு—(Far East)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

வேவு பார்த்தல்.—தென்மேற்கு பஸிபிக் பிரதேசங்களில்.

**19—7—42.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்).

பகலில்.—கவசம்பூண்ட சாமான் ஏற்றும் கப்பல், சுரங்கவேடி வாரும் கப்பல்.—நார்வே (Norway) கடற் கரைக்கருகாமையில். — இரண்டு கப்பல்களும் தாக்குண்டன.

மின்சார உற்பத்திசாலைகள்.—சொக்யூஸ் (Chocques), மாஸின்கார்ப் (Mazingarbe).

இதர தொழிற்சாலைகள்.—ஆக்கிரமித்த பிரான்ஸில் (France) உள்ள லில்லி பெதூன் (Lille Bethune) பிரதேசம்.

விமான எதிர்ப்புகள்.—பாஸ்டி கலே (Pas de Calais) பிரதேசத்திற்கு அருகாமையிலுள்ள கடற்கரை ஜில்லாக்களில். — 1 விமானம்.

இரவில்.—விஜிஸாக் (Vegesack).

**லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்).

கப்பல்துறை பிரதேசம், கப்பல்கட்டு மிடங்கள், துறைமுகம்.—டொப்ருக் (Tobruk).

மேர்ஸா மாட்ரு (Mersa Matruh) விரோதி டாங்கிகள் போக்குவரத்து.—யுத்தப் பிரதேசத்தில்.

எதிர்ப்பதும், வேவு பார்ப்பதும்.—எல் அலமீனி (El Alamein)ல் முன்னணிப் பிரதேசங்களில்.

**ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்).

விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும்.

**தூரக்கிழக்கு—சைனு (China)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

ஜப்பானிய சைனியத் தலைமை ஸ்தானம்.—லின்ச்வான் (Linchwan).

**தென்மேற்கு பஸிபிக் (S. W. Pacific)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

**20—7—42.** (திங்கட்கிழமை.)

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்).

பகலில்.—பற்பல ராணுவ லக்ஷியங்கள்—ஆக்டிவில்லி (Octeville)க்கும், லி டி ரிபோர்ட் (Letreport)டுக்கும் இடையே.

கப்பலை இழுத்துவரும் கவசம்பூண்ட சிறு யந்திரம்.—ஸோமி (Somme) குடாவில்.

ரயில்வே ஸ்டேஷன்.—டியப் (Dieppe)புக்கு வடக்கே. — 1 விமானம்.

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|

**14—7—42.** (செவ்வாய்க்கிழமை).

**பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்).

| | | | | |
|---|---|---|---|---|
| | மால்டா (Malta) | | 3 விமானங்கள். | |

**தூரக்கிழக்கு (Far East)**—(ஜப்பானிய விமானங்களால்).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**15—7—42.** (புதன்கிழமை).

**பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்).

மால்டா (Malta).

**எகிப்து (Egypt)**—(ஜெர்மன் விமானங்களால்).

பிரிடிஷ் ஸ்தானங்கள்—எல் அலமீன் (El Alamein) பிரதேசத்தில்.

**16—7—42.** (வியாழக்கிழமை).

**பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்).

மால்டா (Malta).

**17—7—42.** (வெள்ளிக்கிழமை).

**பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்).

| | | | | |
|---|---|---|---|---|
| | பகலில்.—இங்கிலாந்தி (England)ன் தெற்குக் கடற்கரை லண்டன் (London) பிரதேசத்தில் ஒரு இடம். | | 1 விமானம். | |

**மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்).

| | | | | |
|---|---|---|---|---|
| | மால்டா (Malta). | | 4 விமானங்கள். | |

**தூரக்கிழக்கு-ஸாலமன் (Solomon) தீவுகள்**—(ஜப்பானிய விமானங்களால்).

| | | | | |
|---|---|---|---|---|
| | விமானச் சண்டை—டுலாகி (Tulagi). | | 2 விமானங்கள். | |

**18—7—42.** (சனிக்கிழமை).

**பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்).

மால்டா (Malta)

**எகிப்து (Egypt)**—(ஜெர்மன் விமானங்களால்).

நேச நாடு விமானங்கள் இறங்குமிடம்—பெரல் ஆரப் (Berel Arab) பிரதேசத்தில்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களி லிருந்து குண்டு கள் போடுவதி னல் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|

**19—7—42.** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்).

மால்டா (Malta).

**20—7—42.** (திங்கட்கிழமை).

**பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்).

மால்டா (Malta) 1 விமானம்.

**தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**–(ஜப்பானிய விமானங்களால்).

மோர்ஸ்பி (Moresby) துறைமுகம்.

---

# யுத்தக் குறிப்புகள்.

**தேசீய யுத்த முன்னணி. லாபம் சம்பாதிப்பது.** யுத்த முன்னணியில் எல்லாவித விஷயங்களும் கவனிக்கப்படவேண்டும். முக்கியமாக வியாபாரிகள் அதிகலாபம் அடையாமல் செய்வதே யுத்த சேவை செய்கிறவன் கவனிக்கவேண்டிய விஷயமாகும். விலை வாசிகளைக் குறைத்து விற்கும்படி செய்து பொதுமக்கள் கலவரமடையாமல் செய்வதே ஒரு பெரிய காரியமாகும். உணவுப் பண்டங்களுக்கும் இதர முக்கிய சாமான்களுக்கும் அதிகம் விலை கொடுக்கவேண்டியிருப்பதாலேதான் யுத்தத்தின் பளுவைப் பொதுமக்கள் பொறுக்கவேண்டியிருக்கிறது. இதனல் யுத்தத்தை முதலில் நிந்திக்கிருர்கள். அடுத்தபடியாக வியாபாரிகளை நிந்திக்கிருர்கள். ஏதோ தங்களுக்குப் பரிதாபகர நிலை வந்து, தத்தளிக்கிறதாக எண்ணுகின்றனர். இந்த நிலையில் அதிக லாபமடையும் முறை நின்றுல், பொது மக்களின் கலவர நிலை மீளும். எதிரியை எதிர்க்கும் உணர்ச்சியும் சக்தியும் அதிகரிக்கும்.

இவ்விதம் செய்யவேண்டுமென வாயால் சொல்லுவது சுலபம். காரியத்தில் செய்வது சிரமம். அரசாங்கத்தார் அதிகமான முயற்சிகளை எடுத்துவந்த போதிலும் நிலைமை அதிகரித்துக்கொண்டேபோகிறது. இதைத்தவிர சாமான்களைச் சேமிப்பது, போக்குவரவு, வசதி முதலிய பிரச்னைகள் இருக்கின்றன. வியாபாரி மிகவும் கெட்டிக்காரத்தனமாக நடந்துகொள்ளுவான். பொய்யான இன்வாய்ஸ்களைக் காண்பிப்பான். கொடுக்கும் பணத்திற்கு ரசீது கொடுக்க மறுப்பான். அரசாங்கத்தார் நிர்ணயித்திருக்கும் விலைக்குத்தான் சாமான்களை விற்கவேண்டுமென்று பொதுமக்கள் நிர்ப்பந்தித்தால் ‘தன்னிடம் சாமானே இல்லை, அடுத்த கடைக்குப்போ’ என்பான். அல்லது மட்டமான சாமான்களையும், கலப்பான சாமன்களையும் விற்கத்தோன்றும். வியாபாரிகளாகச் சேர்ந்து பொதுவாக ஒரு விலையை வைத்துக்கொண்டாலும் பொதுஜனங்கள் அதிக விலையைத்தான் கொடுக்க நேரும். இனி கொஞ்ச நாட்களில் விலை அதிகரிக்கும் என்று பிரஸ்தாபம், வந்தாலே போதும். இப்போதே வியாபாரிகள் விலைகளை உயர்த்திவிடுவார்கள். இந்த சந்தர்ப்பத்தில், நமது உணவுப்பொருள் உள்நாட்டிலேயே பயிரிடப் படுகின்றன. அவைகளுக்கும் அயல்நாட்டு நிலைமைக்கும் அதிக சம்பந்தமில்லை என்பதை உணரவேண்டும்.

அடுத்தபடியாக இதர சாமான்களெல்லாம் யுத்தகாலத்தில் விலை உயர்ந்ததால் உணவுப்பண்டங்களின் விலையும் உயர்ந்துவிட்டதாக வியாபாரிகள் சொல்லுகிறார்கள். உண்மையாதெனில் எல்லாவற்றிற்கும் வியாபாரிதான் காரணம். பர்மா, இந்தோ-சைனா நஷ்டமானதும், மத்தியக்கிழக்கு நாடுகளுக்கு சாமான்களை அனுப்பவேண்டியிருப்பதும், முக்கிய காரணங்களாக இருந்தாலும், சாமான்களைச் சேமித்துவைக்கவேண்டுமென்று நினைப்பதும் விலைகள் உயர்ந்ததற்கு ஒரு காரணம். தன்னிடம் சாமான்கள் இல்லையென்று காண்பிக்க ஒருவருக்கும் தெரியாத இடத்தில் கொண்டு பத்திரம் செய்து விடுகின்றனர். சாமான்கள் கிடைக்கவில்லையென்று சொல்லுவதற்கு பெரிய வியாபாரிகள் காரணம். அதேவிதமாக சிறுகடைக்காரர்கள் ஏழைமக்களின் கஷ்டங்களைத் தெரிந்துகொள்ளாமல், வாய்த்த சந்தர்பத்தை வைத்துக்கொண்டு கொள்ளை லாபம் அடிக்கிறார்கள். பெரிய முதலாளி மூட்டைக்கு சில அணாக்களை உயர்த்தினால் சிறு கடைக்காரன் ஒரு அணாவிற்கு காலணா வீதம் உயர்த்திவிடுகிறான்.

இவ்விதம் நடப்பதைத் தடுக்கவேண்டுமென்று சொல்லுவது மாத்திரம் போதாது. உண்மையிலேயே அதைத் தடுக்க முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்.

சாதாரண சமயங்களில், ஏராளமாக சாமான்களை உற்பத்தி செய்தாலும், பேட்டியிருந்தாலும், விலை வாசிகள் சகாயமாகும். யுத்த சமயங்களில் வியாபாரிகள் ஒன்று சேர்ந்துகொண்டு விலைகளை உயர்த்துவதால் பேட்டிக் கடைகள் ஏற்பட்டால் தான் பொதுஜனங்களுக்கு சாதக மேற்படும். உணவுப்பொருள்களை அதிகம் உற்பத்தி செய்யும் திட்டம் கொஞ்ச நாள் கிரமித்துத் தான் பலனளிக்கும். அதிகவிலை கொடுக்க மறுக்கும் படி பொதுஜனங்களைச் சொல்லுவதும் அசாத்தியமான காரியமாக இருக்கிறது. ஏனென்றால் உண்க உணவும், உடுக்க உடையும் அத்யாவசியமாகவே இருக்கின்றன. கடைகளையும், ஸ்டோர்களையும் வைத்து நடத்தும் படி அரசாங்கத்தாரை வேண்டப்படுகிறது. வியாபாரம் என்பது தந்திரமான தொழில். அதிகப் பழக்கம் இருக்கவேண்டும். பிறரை ஏமாற்றுவதிலேயே தான் கருத்து. அரசாங்கத்தாருக்கு அவ்வளவு பழக்கம் இருக்காது. ஆகையால் இடையிலுள்ளவர்கள் ஏமாற்றாதபடி ஜாக்கிருதையுடனிருக்கவேண்டும். ஆனால் இதில் ஒரு விசேஷம். ஏழைகளுக்குக் கடன் கொடுக்கமுடியாது. இந்த சிரமத்தைத் தீர்ப்பதற்குப் பொதுமக்களே ஒன்று சேர்ந்து கூட்டுறவுச் சங்கங்களாக அமைத்துக்கொண்டால் சாதகமான பலன் கிடைக்கும். இதிலும் எல்லாப் பொதுமக்களுக்கும் வியாபாரத் தோது தெரியாது. ராஷ்டேல் கிராமத்தில் முன்வந்தமாதிரி எல்லா கிராமத்திலும் முன்வரமாட்டார்கள். இருந்தாலும் யுத்த காலத்திலும், பிற்பட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்பட்டிருந்தால் தான் நன்மையேற்படும். கிராமங்களில் சில்லரை வியாபாரிகளின் கொடுமை நீங்கும். கொள்ளையடிக்கமுடியாது. ஜனநாயக தேசீய வாழ்க்கையை அமைக்க ஹேதுவாகும். ஆத்மசக்தியும், கௌரவுமும் ஓங்கிவளரும்.

தேசீய யுத்த முன்னணியில் சேவை செய்கிறவர்கள் இந்த பலவித அம்சங்களை எடுத்துரைத்து அதிக லாபம் அடிப்பதைத் தடுக்கவேண்டும். கசக்கி வாங்குவதையும் தடுக்கவேண்டும். பெரிய வியாபாரிகள், தேசாபிமானத்துடன் நடந்துகொள்ளவேண்டும். இது நடக்காத இடங்களில் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்த முயலவேண்டும். அல்லது ஏற்கனவே இருக்கும் சங்கங்களைப் புதிய நிலைகளுக்குத் தக்கவாறு நடத்த ஏற்பாடு செய்யவேண்டும். தனக்குப் பழக்கமான இடங்களில் சமாதான முறையிலேயே பிரசாரம் செய்து காரியங்களைச் சாதிக்கவேண்டும்.

வி வி வி வி வி வி வி

**ருஷ்ய நிலைமை**

கவலைக்கிடமானதாக இருந்தாலும் இடை இடையில் திருப்திகரமான செய்திகளும் கிடைக்கின்றன. ஜெர்மானியரின் தந்திரங்கள் பின் கண்டவிதமாகக் காணப்படுகின்றன. முதலில் யூக்ரேனின் கீழ் பாகங்களைப் பிடிக்கவே நாஸிகள் முயற்சித்தனர். அடுத்தபடியாக வால்காவை நோக்கி முன்னேறி காகஸஸிலிருக்கும் ருஷ்யப் படைகளைப் பிளந்து செல்லும் எண்ணம் இருக்கிறது. இதன்மத்தியில்

வாரனேஷ் இருக்கிறது. பிரயான்ஸ்க், மாஸ்கோ, கலினின் பிரதேசங்களில் நடக்கும் சண்டைகள் மும்மரமாக இல்லை. முக்கியமாக ருஷ்யப் படைகளை வடக்கில் ஈடுபடுத்தவே இப்பிரதேசங்களில் சண்டை நடத்தப்படுகிறது. வாரனேஷுக்குத் தெற்கில் 5 எதிரிப்படைகள் இருக்கின்றன. ஒன்று கர்ஸ்கிலிருந்து ஸரடாவை நோக்கி வந்து வாரனேஷில் தடுக்கப்பட்டது. இரண்டாவது பொகுசரிலிருந்து (Boguchar) டான் நதிவழியாக முன்னேறுகிறது. மூன்ருவது கன்டாமிராங்காவிலிருந்து டான் பிரதேசத்தை நோக்கிவருகிறது. நான்காவது மில்லரோவோவிலிருந்து ஸ்டாலின்கிராட்டை நோக்கி வால்காவழியாக வருகிறது. இது டானிலிருந்து 50 மைல் தூரத்திலிருக்கிறது. ஐந்தாவது மில்லரோவோவிலிருந்து ரோஸ்டவ்வை நோக்கியும் போகிறது.

இவ்விதமாக வரானேஷுக்கு வடக்கில் சிறிய சண்டையே நடக்கிறது. தெற்கில் பெரிய எதிர்ப்புகள் நடைபெறுகின்றன. ஜெர்மன் சைனியங்கள் டான் நதியின் கரையிலும் டானெட்ஸ் குடாவில் உள்ள ஸ்டாலின்கிராட், ரோஸ்டவ் நகரங்களைக் கைப்பற்றவும் சண்டை செய்கின்றன.

இதில் ஒரு விசேஷமென்னவென்ருல் வாரனேஷில் நடக்கும் பெரிய எதிர்ப்புதான். வாரனேஷைப் பிடித்ததாக ஜெர்மன் கூற்று பொய்யானது. இரண்டு வாரகாலமாக வீணுக எதிர்த்து நின்றும் பலிக்கவில்லை. இதனுல் அதன் சுற்றுப்புறங்களெல்லாம் நரகலோகத்திற்குச் சமமாகச் செய்யப்பட்டது. மாஸ்கோவிலிருந்து காகஸஸ்க்குப்போகும் மார்க்கம் தடைபட்டிருக்கிறது. வாரனேஷுக்குத் தெற்கில் டான் நதியைக்கடந்தும் ருஷ்யர்கள் மேற்கே வந்திருக்கின்றனர்.

அடுத்தபடியாகத் திருப்திகரமான விஷயம் என்னவென்ருல் தெற்கிலுள்ள ருஷ்யப் படைகள் அமைதியுடனே பின்னிலைகளுக்குப் போகின்றன. அங்கே சாதகமான இடங்களை அமைத்துக்கொண்டு எதிர்ப்பார்கள். ருஷ்யச் சைனியங்கள் பிளவுபடவுமில்லை. பிரிக்கப்படவுமில்லை. ருஷ்யர்கள் ஒற்றுமையுடனேயே இருக்கின்றன. ருஷ்யா எதிரிகளை எதிர்த்தடிக்கவேண்டுமென்ற ஒரே நோக்கத்துடனிருக்கிறது. குயிபிஷெவ்விலிருந்து மாரிஸ் ஹின்டஸ் என்பவர் சொல்லும் விதமாக ‘ருஷ்யா அதைரியம்கொள்ளவில்லை, பிரதேசங்களை எதிரி பிடித்தாலும் பாதகமில்லை. ஏனென்ருல் ஆங்காங்கு எதிரிக்குப் பிரமாதமான நஷ்டம் விளைந்திருக்கிறது. எதிரி முறியடிக்கப்படும் காலத்தையே பிரதீக்ஷித்திருக்கவேண்டும். சென்ற மாரிகாலத்தில் டோலாவைப் பிடிக்கமுடியாமல் மாஸ்கோவிற்குச் சென்றதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். மறுபடி அங்கிருந்தும் விரட்டப்பட்டான்.’

மனித சக்தியில் ருஷ்யாவில் நிச்சயமான ஆதிக்கம் இருக்கிறது. யூக்ரேன் நஷ்டமானுலும், வியவசாய நிலைமை திருப்திகரமாக இருக்கிறது. ஏனென்ருல் டான், டானெட்ஸ் பிரதேசத்தில் எதிரியின் தொந்தரவிக்கிடையிலேயே தானிய அறுவடை செய்யப்பட்டது.

வழக்கப்படி ஜெர்மன் ஒலிபரப்பு அராபிய பாஷையில் பொய்யான விஷயங்களைத்தான் சொல்லிவருகின்றன: ‘குறுக்கு எதிர்ப்புகளைச் செய்ய ருஷ்யர்களுக்குச் சக்தியில்லை.’ ஆனுல் உண்மை யாதெனில் 1942 வருஷம் மே மாதத்தில் 1941 ஜூனைவிட 100 சதவிகிதம் அதிகமாகவே ருஷ்யாவில் யுத்த சாமான்கள் உற்பத்தி செய்யப்பட்டன. யூரலுக்குப் பக்கத்தில் நிலக்கரி, உலோகங்களை உற்பத்தி செய்யவேண்டுமென்று ஸ்டாலின் சொன்னபடி நடைபெறுகிறது. உதாரணமாக ஸிஸ்ரா—பாஷ்கிரியா என்ற இடத்திலும், மத்திய ஆசியாவிலும் உற்பத்தி செய்யப்படும் எண்ணெய் 70 லக்ஷம் டன். இது காகஸஸில் உற்பத்தி செய்யப்படுவதைக் காட்டிலும் அதிகம்.

இதே வாரத்தில் ஜப்பான் ஒலிபரப்பானது பின்கண்ட விதமாகச் சொல்லப்பட்டது. ருஷ்யர்களுக்கும் பிரிடிஷ்காரர்களுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டு ஆறு வாரகாலமாகியும் ஒரு உதவியும் ருஷ்யாவிற்குச் செல்லவில்லையாம். இது பொய்யானதென்று உற்பத்தி இலாகா மந்திரி காப்டன் ஆலிவர் லிட்டில்டன் சொல்லி

யிருக்கிறார். ஆல்டர்ஷாட் நகரில் சனிக்கிழமையன்று அவர் சொன்னதாவது :-- "ஏற்கனவேயே 2,000 டாங்கிகள் அனுப்பப்பட்டிருந்தும், மத்தியக்கிழக்கு முதலிய இடங்களுக்குத் தேவைக்குத் தக்கவாறு அனுப்பியும் சராசரியாக வாரத்திற்கு 50 டாங்கிகள் வீதம் செல்லுகின்றன. ஜூன் வரை அனுப்புவதாகச் சொல்லப்பட்டதைவிட 11 சதவிகிதம் அதிகமாக மே மாதத்திலேயே அனுப்பப்பட்டிருக்கிறது. 'ருஷ்யாவிற்கு அனுப்பப்படும் உதவி, திட்டத்தைவிட அதிகமாகவே' இருக்கிறது என்று ஒருவர் சொன்னார்.

ஜூலை 9வ ஜெர்மன் ரேடியோவில் நேசதேசத் துணைக்கப்பல் கூட்டத்திலிருந்த 32 கப்பல்களை அழித்ததாயும், அவைகளில் டாங்கிகளும், விமானங்களும் உணவுப்பொருள்கள் இருந்ததாயும் சொல்லப்பட்டது. ஆர்டிக்கில் சஞ்சரித்து வரும் டர்பிட்ஸ் என்ற ஜெர்மன் சண்டைக் கப்பலும் இதில் ஈடுபட்டிருந்ததாயும் சொல்லப்பட்டது. உண்மை யாதெனில் ஜெர்மன் யூ படகுகளும், பாய்ச்சல் விமானங்களும் இருக்கும்போதே இக்கப்பல் கூட்டம் பத்திரமாகப் போய்ச் சேர்ந்தது. இந்த விவரம் நியூயார்க் ரேடியோவிலும் பிரப்தாவ் பத்திரிகையிலும் சொல்லப்பட்டுள்ளது. வான் டர்பிட்ஸ் தாக்கப்பட்டதினால் அவமானத்தைப் போக்கடிக்கவே இம்மாதிரி ஜெர்மன் பிரசாரம் செய்யப்படுகிறது.

வி வி வி வி வி வி வி

**தூரக்கிழக்கு.** பிலிப்பைன்ஸ், டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள், ஸயாம், மலேயா, பர்மா முதலியவைகளை ஜப்பான் வியாபித்துக் கொண்டதிலிருந்து அவைகளைப் பாதுகாக்கும் வேலையில் தற்போது ஈடுபடவேண்டியிருக்கிறது. முக்கியமாக நேசதேச விமானத் தாக்குதலிலிருந்து பாதுகாக்கவேண்டியிருக்கிறது. இதற்காக சைனா யுத்தத்தை சீக்கிரம் முடிக்கப்பார்க்கிறது. அதன் விமான தளங்களையும், கப்பற் துறைகளையும் ஆக்கிரமித்துக்கொண்டு வருகிறது. நேசதேச தளங்களைப் பிடிப்பதற்கும் சித்தமாக இருக்கிறது. வ்ளாடிவாஸ்டக் உள்பட ருஷ்யக் கடற்கரையைக் கைப்பற்றவும் தயார். ஏனென்றால் இந்த இடங்களிலிருந்து தான் தனக்கு ஆபத்து என்று கண்டுகொண்டிருக்கிறது. இந்த பயத்திற்காக மஞ்சுகோவில் ஏராள படைகள் திரட்டப்படுகின்றன. அலூஷியனிலும் விமான தளத்தைத் தயார் செய்து வருகிறது. ருஷ்யாவிற்குச் செல்லும் அமெரிக்க தளவாடங்களையும் தடுத்துவிடலாம். ஜெர்மனி வெற்றிபெறும் போல் காணப்பட்டதும் ருஷ்யாவையும் தாக்கலாம். மேலும் தனக்கு லாபம் கிடைக்கும் போல் காணப்பட்டால் மற்ற பகுதிகளில் எங்கேயாவது தாக்கும். இவ்விதமாக ஜப்பானின் செய்கை தன்னலம் கருதியதாகவே இருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**எகிப்து.** இவ்விடத்தில் நடந்த சண்டையை கவனிக்குங்கால் ஜெனரல் ஆசின்லக்கிற்கு சிறிய வெற்றிகிடைத்ததாகவே சொல்லலாம். எல் அலமீனுக்கு அருகில் கடலுக்கும், பாலைவனத்திற்கும் இடையில் யுத்தரங்கம் அமைந்தது தான் காரணம். இதை எளிதில் சூழ்ந்து கொள்ளவும் முடியாது. விட்டுவிட்டுப் போகவும் முடியாது. சரியான சமயத்தில் புதிய படைகளும், டாங்கிகளும், பீரங்கிகளும் வந்துசேர்ந்தன. ஆசின்லக்கின் கீழ் பிரிடிஷ், இந்தியர், தென் ஆபிரிக்கர், ஆஸ்திரேலியர், நியூஸிலாந்தினர் ஆக சாம்ராஜ்யத்தின் பல பாகத்தினர் சண்டை செய்கின்றன.

ஆசின்லக்கின் படைக்கு ஜெனரல் லீ டாங்கிகளும், (Honeys') என்ற அமெரிக்க ஜெனரல் ஸ்டூவர்டு டாங்கிகளும், பிரிடிஷ் வாலண்டைன் டாங்கிகளும், 25 பவுண்டு பீரங்கிகளும் நவீன முறையான மற்ற ஆயுதங்களும் வந்திருக்கின்றன. அமெரிக்க பெரிய விமானங்கள் எதிரி நிலயங்களையும், போக்குவரத்துகளையும், கான்வாய் கப்பல்களையும் தாக்கிவருகின்றன. அமெரிக்க விமானப் படைத்தலைவரான ஜெனரல் ப்ரரிடன் புது டெல்லியிலிருந்து கெய்ரோவிற்கு மாற்றப்பட்டார்.

எல் அலமீனுக்கு மேற்கே 6 மைல் நீளத்திற்கு நேசதேசப்படை முன்னேறி டெல் எலிஸாவில் 2,000 கைதிகளைப் பிடித்தது. இவைகளுக்குப் பிரதியாக ரோமல் தீவ்ர முயற்சி செய்தான். முதல்நாள் மத்தியபாகத்தில் தாக்கி 20 டாங்கிகளை இழந்தான். இரண்டாம்நாள் வடக்கே டெல் எலிஸாவைத் தாக்கினான். பயனொன்றுமில்லை. மூன்றாம்நாள் டெல் எலிஸாவை மறுபடி தாக்கி சிறிதளவு இடத்தையும் பிடித்தான். ஆனால் உடனே விட்டுவிட்டான். அதே காலத்தில் ருவீஸ்டு பிரதேசத்தை நேசதேசங்கள் பிடித்தன. நான்காம்நாள் ருவிஸ்டை மறுபடி எதிரி தாக்கினான். ஐந்தாம்நாள் ருவிஸ்டைத் தாக்கியும் பலிக்கவில்லை. ஆகவே சண்டை முன்னும் பின்னுமாக நடக்கிறது. எகிப்திலிருந்து அவனை விரட்டும் வரை நாம் திருப்திகொள்ளக்கூடாது.

வி வி வி வி வி வி வி

**அலெக்ஸாண்டிரியாவில் பிரெஞ்சு யுத்தக் கப்பல்கள்.** இரண்டு வாரங்களுக்கு முன் ரோமல் வெகுவேகமாக முன்னேறி எகிப்து எல்லைக்கு அருகில் வந்ததும், அலெக்ஸாண்டிரியாவில் அடைக்கப்பட்டிருக்கும் பிரெஞ்சுக் கப்பல்களைப்பற்றிய பிரச்னையை சீக்கிரம் கவனிக்க வேண்டியதாயிற்று. அவைகளில் ஆயுத பரிஹாரணம் செய்யப்பட்டிருந்தாலும் தனியே சஞ்சரிக்கும் சக்தியுடன் இருக்கின்றன. எதிரி வசத்தில் சென்றால் ஆபத்தாக முடியும், இது சம்பந்தமான விஷயத்தை பிரிடனுடன் கலந்துகொண்டு அமெரிக்கா பிடேனுக்கு அறிவித்தது. ஸூயஸ் கால்வாய் வழியாக ஒரு அமெரிக்கத் துறைமுகத்திற்கு எடுத்துச்செல்ல வேண்டுமென்றும், இல்லாவிட்டால் பிரிடன் அழித்துவிடுமென்றும் எச்சரிக்கை செய்யப்பட்டது. அடுத்தப்படியாக மார்டின் கூவிற்கு அனுப்பலாமென்றும் சொல்லப்பட்டது.

ஆனால் விஷி இரண்டு விதமாயும் செய்ய மறுத்துவிட்டதாகச் செய்திகிடைத்திருக்கிறது. 'பிரன்ஸின் கௌரவத்திற்கே கெடுதல்' என்று விஷி குறிப்பில் இருக்கிறதாம். அப்படி ஏதாவது கெடுதி நேர்ந்தால் அமெரிக்கா பாத்தியப்படுமென்று லவால் எச்சரிக்கை செய்திருக்கிறான்.

தற்சமயத்திலும் ஆங்கிலேய—அமெரிக்க நோக்கம் தயவுள்ளதாகவே இருக்கிறது. இன்னும் சிநேகமாகவே நடந்துகொள்ள இந்த இருநாடுகளும் விரும்புகின்றன. அந்தரங்கத்தில் லவாலை யாவரும் துவேஷிக்கின்றனர். இருந்தாலும் பிடேனின் குணத்திற்காக நட்பு பாராட்டப்படுகிறது.

இவ்விதம் ஆங்கிலேய—அமெரிக்க நடவடிக்கை இருப்பதால் அச்சுநாட்டு திட்டத்திற்கு தடங்கலேற்பட்டிருக்கிறது. எவ்வளவு குற்றங்களைச் செய்தாலும் பிரான்ஸின் பேரில் இங்கிலாந்திற்கும், அமெரிக்காவிற்கும் பிரியம் இருக்கிறது. ஆனால் லவாலை வெறுக்கின்றன. பிரான்ஸுடன் சண்டை செய்ய நேர்ந்தாலும் சண்டை செய்யும். 'நாங்கள் உங்களை விடிவிக்கவே முன் வருகிறோம்' என்று இந்நாடுகள் உண்மையைச்சொல்லும்.

இதில் ஒரு விசேஷமென்னவென்றால் ஜெர்மனிக்கு விரோதமாக நாடுகளை ஒன்றுசேர்ப்பதுதான் கருத்து. யுத்தம் முடிவதற்கு முன்பே அது சாத்யமானால் வெற்றி நீடித்திருக்கும்.

வி வி வி வி வி வி வி

**கிளாஸ்டர் கோமகனின் விஜயம்.** இப்பத்திரிகையின் மற்றொரு பக்கத்தில் கிளாஸ்டர் கோமகன் இந்திய மக்களுக்கு விடுவித்த செய்தி அச்சிடப்பட்டிருக்கிறது. அச்செய்தி அமைதியை உண்டு பண்ணுகிறதாயும், வெற்றியை ஊர்ஜிதப்படுத்துகிறதாயும் இருக்கிறது. இவைகளைக்காட்டிலும் அச்செய்தியிலிருந்து இந்தியா அறியவேண்டிய சில நுட்பமான பாகமும் இருக்கிறது. "இந்தியா இயற்கையாகவே ஒன்றுசேர அமைந்திருக்கிறது. வேற்றுமைகளிருந்தால் இந்தியா பலஹீனமடையும். ஒற்றுமையிருந்தால் அளவு கடந்த பலம் பெறும்."

ஜூன் 9உ முதல், ஜூலை 19உ வரை இங்கேயிருந்தார். 52 மணி நேரத்தில் சஞ்சரிக்கக்கூடிய 7,695 மைல்கள் விமான மூலமாகவே சஞ்சரித்தார். 1,500 மைல்கள் ரயில் பிரயாணம் செய்தார். 7 மாகாணங்களையும், 3 ஸமஸ்தானங்களையும் சுற்றிப்பார்த்தார். 9 ஏ. ஆர். பி. ஸ்தாபனங்களையும், 15 ராணுவ ஆஸ்பத்திரிகளையும், பலசைனிய ஸ்தாபனங்களையும் பார்வையிட்டார். எல்லாவற்றையும் சிறிது காலத்தில் முடித்திருந்தாலும் பலவிதமான பேர்களைக்கண்டு பேசினார். இருக்கும் நிலைமையைச் சரிவர அறிந்தார். இந்நாட்டின் பாதுகாப்பின் பொருட்டு செய்யப்பட்ட ராணுத ஏற்பாடுகளை நேரில் பார்த்தார்.

கடைசியாக ஜெனரல் வேவலுக்கு அவர் அனுப்பிய செய்தியாவது :—

"இந்தியா, ஸிலோன் முதலியவைகளை நான் சுற்றிப்பார்க்கும்போது இங்கே செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளும், சந்தோஷ உணர்ச்சியும் எனக்குத் திருப்தியை அளிக்கின்றன. யுத்தகாலத்தில் இப்படைகள் தங்களுடைய புராதன கியாதிக்குத் தக்கவாறு நடந்துகொள்ளும்.

"பொதுவான காரணங்களான நியாயம், சத்தியம், இறக்கம் முதலியவைகளில் நம்பிக்கைவைத்தே நாம் யாவரும் சண்டையிலீடுபட்டிருக்கிறோம். இவைகள் தான் முடிவில் எஞ்சியிருக்கும். இவைகளைக்கொண்டுதான் நாம் சமாதானமாக வாழ முடியும்.

"எல்லாவித வகுப்பினருக்கும் எனது நன்றியைச் செலுத்துகிறேன். அவர்களின் தைரியம், பழக்கம், பொருமை முதலியவைகளால் முடிவான வெற்றியும் கிடைக்குமென்று நம்புகிறேன்."

வி வி வி வி வி வி வி

**ரத்த பாங்கிகள்.** இதைப்பற்றி சில விவரங்கள் கொடுக்கப்பட வேண்டும். நவீன யுத்த முறைகள் கொடுமையாக ஆக, ஜனங்களின் மேலுள்ள விசுவாசத்தாலும், நூதன ரஸாயன சாஸ்திர முறைகளாலும் யுத்தரங்கத்திலும், குண்டுகள்பட்டதால் காயமடைந்தவர்களுக்கு ரத்தக்குறைவினால் உயிர்போகும் தருவாயில் இருந்தால் புதிய ரத்தத்தை உட்செலுத்தி பிழைப்புமூட்டப்படுகிறது. ஆரம்ப காலங்களில் அப்போது அருகிலுள்ளவர்களின் ரத்தத்தைப் புகட்டுவது சகஜமாக இருந்து வந்தது. ஆனால் பிறகு நூதன முறைகளால் ரத்தத்தைப் பவுடராக மாற்றி டப்பிகளில் அடைத்து வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்படுகிறது. இவைகளுக்கு ரத்த பாங்கிகள் என்று பெயர். செஞ்சிலுவை கோஷ்டியினர் இவ்வேலையில் அதிக சிரத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அமெரிக்காவிலிருந்து 100-காலன் ரத்தம் இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டது. இங்கிலாந்திலும் தயார் செய்யப்படுகிறது. இந்தியாவில் கிண்டியில் (Guindy) நடந்துவருகிறது. மதுரையில் தற்போதுதான் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த முயற்சி, தற்செயலாகக் காயங்கள் நேர்ந்த சமயத்திலும், ரத்தக் குறைவினால் ஏற்பட்ட வியாதிகளுக்கும் உதவும். யுத்த காலத்தில் மிகவும் முக்கியம். எதிரித் தாக்குதல் ஏற்படும்போல் காணப்படும் இந்த சமயத்தில் இங்கு மெத்த அவசியம். இதற்கு இணங்கி தனது ரத்தத்தைக் கொடுக்க அதிகம் பேர் முன்வரவேண்டும். திடபலம் வாய்ந்தவர்கள் வாரம் 10 அவுன்ஸ் ரத்தம் கொடுக்கலாம். இவ்விதம் ஏற்படும் ரத்தக் குறைவிற்கு சாதாரணமான ஆகாரம் உட்கொண்டாலே போதுமானது. வலியேற்படாமல் முழங்கைக்கு அருகிலிருந்து ரத்தம் எடுக்கப்படுகிறது. இதனால் களைப்பு பிராணபாயம் முதலியவை ஏற்படாமலும் செய்யப்படுகிறது.

---

# இந்திய மக்களுக்கு கிளாஸ்டர் கோமகன் செய்துள்ள வேண்டுகோள்.

(ஜூலை 16உ ஒலிபரப்பப்பட்டது).

**ஒற்றுமையின்பொருட்டு இந்தியா அமைக்கப்பட்டது.**

முதலாவதாக எனக்குத் தோன்றியதென்னவென்றால் ஒற்றுமைப்பட்டிருப்பதற்காகவே இந்தியா இயற்கையாக அமைந்திருக்கிறதென்பது.

பிளவு பட்டிருந்தால் இந்தியா பலஹீனமாகிவிடும். ஒற்றுமையுடனிருந்தால் அளவிற்கு மிஞ்சி ஒரு புகழ்பெற்ற நாடாகலாம்.

இவ்வளவு பெரிய தேசத்தில் ஒரேவிதமான தன்மை என்பது எதிர்பார்க்கப் படமுடியாதாயினும், மதம், பாஷை, ஜாதி, பழக்கம் முதலியவைகளில் வேற்றுமையிருப்பதால் ஒற்றுமையென்பது மெத்த அவசியம். பலவித வேற்றுமைகளைப் புறக்கணித்து தேசத்தில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பம் உண்டாகி இருப்பதைக் காண்கிறேன். இதற்கு முக்கியமாக யுத்தமே ஒரு காரணமாக இருக்கிறது.

## வெற்றியில் தீர்மானம்.

இதிலும் இந்தியாவில் ஒரேவிதமான மனப்பான்மை ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவிலும், ஸிலோனிலும் நான் சென்ற இடங்களில் பார்த்த மனிதர்களிடையிலும், எனக்குக் கிடைத்த கடிதங்களிலும் வெற்றியில் ஒரு நம்பிக்கையும், நாம் வெற்றி பெறுவோமென்ற நிச்சயமும் காணப்பட்டது. இந்த அபிப்பிராயம் வியத்தமாக காணப்படாத போதிலும், அந்தரங்கமாக இருக்கிறது.

பயப்படும் சிலரே வெளிப்படையாகப் பேசிவருகின்றனர். யுத்த முயற்சியில் பூராஈடுபட்ட பலர் மௌனமாகவே தங்களது வேலைகளைக்கவனித்து வருகின்றனர்.

பின்னுடி சொல்லப்பட்டவர்களுடன்தான் நான் கண்டு பேசி தைரியம் கூற வந்தேன். இவர்கள் யாவரும் தேசீய யுத்த முன்னணியில் ஒத்துழைப்பைக் காண்பித்துவருகின்றனர். இம்முன்னணி இந்தியாவிற்கு அரும் சேவையைச் செய்து வருகிறது. இது சம்பந்தமாக விச்வாஸம் வாய்ந்த இந்திய மக்களின் மொழிகள் நன்கு கவனிக்கப்படும்.

எனக்குத் தெரியப்படுத்திய பிரகாரம் மற்ற உலகிற்கும் பிரிடன், அமெரிக்கா, ருஷ்யா, சைனு, இதர நேசநாடுகள், இந்நாடுகளின் வாசிகளைப் போல் இந்தியர்களும் தைரியம் வாய்ந்தவர்களென்று தெரியப்படுத்தவேண்டும். முன் சொல்லப்பட்ட நாடுகளுக்குள் பெரிய ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறது.

## இந்தியாவின் ராணுவ சக்தி.

மூன்ருவதாக நான் தெரிந்துகொண்டது, இந்தியா, ஸிலோன் இவைகளுடைய பெரிய ராணுவ சக்தி பிரிடிஷாரின் சம்பந்தம் ஏற்படும் காலத்தில் இருந்ததைவிட தற்போது பலமான சைனியங்கள் இந்தியாவில் இருக்கிறதாக மிஸ்ட்டர் வின்ஸ்டன் சர்ச்சில் கூறியதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். நானும் இப்படைகளை இந்தியாவிலும் ஸிலோனிலும் பார்வையிட்டேன். அவைகளின் உணர்ச்சியையும், தன்மையையும், அவைகள் செய்துவரும் பாதுகாப்புவேலைகளையும், ஸிவில் பாதுகாப்புவேலைகளையும் பார்த்தேன்.

நவீன யுத்த முறைகளில் எந்த தேசமும் பத்திரமாக இருக்கிறதாகச் சொல்லமுடியாது. ஆயினும் இந்தியா, ஸிலோன் இவைகளை நோக்கி எதிரி வருவானுயின் அவனுக்குத்தான் சிரமம்.

இதில் விசேஷமென்னவென்ருல் சரியான சமயம் வாய்த்ததும் நமது படைகள் எதிரியிருக்கும் இடத்தைத் தேடிப்போய் முன்னேற்றப்போர்செய்து எதிரியைத் தோற்கடிக்கும்.

இந்த அபிப்பிராயத்தை நானுகக்கொடுக்கவில்லை. ஜப்பானியருடன் சண்டை செய்தவர்களுடன் கலந்து பேசியே இவ்வபிப்பிராயத்தைக் கொடுக்கிறேன். அவர்களுக்கு இந்தத் தந்திரங்களெல்லாம் நன்ருகத்தெரியும். தங்களுக்குச் சமமாகவே ஜப்பானியரையும் கருதுவதால் நிச்சயம் தோற்கடிப்பார்கள். ஜப்பானியருக்கு நேரும் விதமாகத்தான் ஜெர்மானியருக்கும், இதாலியருக்கும் நேரும்.

இந்தியாவிலும், ஸிலோனிலும் உள்ள கப்பல், ராணுவம், விமானம் முதலியவைகளின் பலம் மிக அதிகமாக இருக்கிறது. பிரிடிஷ் படைகளும், இதர ஸாம்ராஜ்யப் படைகளும், இந்தியா எங்கிலும் திரட்டப்பட்ட சைனியமும், பிரிடனின் நேச ராஜ்யமான நேபாளதேசத்து படைகளும் இங்கே இருக்கின்றன. இவைகள் யாவும் எல்லா வகுப்பிலிருந்தும் திரட்டப்பட்டவை. ஏற்கனவே செய்த சண்டைகளில் இவைகள் கியாதி யடைந்திருக்கின்றன.

ஆகவே இந்த சைனியங்கள் வெற்றிபெறும் என்ற நம்பிக்கையுடனிருங்கள். உங்களுடைய சக்தியிலும் நம்பிக்கை வையுங்கள்.

ஒரு மாதத்திற்குமுன் நான் கொண்டுவந்த எனது சகோதரனின் செய்தியில் நல்லெண்ணமும், ஒத்துழைப்பும் வேண்டுமென்று கோரப்பட்டிருந்தது. அவை இரண்டும் இந்தியாவில் இருக்கின்றன. இங்கிருப்பதைக்காட்டிலும் அதிகமாக உலகின் மற்ற பாகங்களில் காணமுடியாது. வெற்றி சீக்கிரம் கிடைத்தாலும் இங்கிருப்பதைக்காட்டிலும் அதிகமான நம்பிக்கையும், தைரியமும், தீர்மானமும் மற்ற இடங்களில் இருக்கமாட்டா.

நான் ஹைதராபாத்திற்குச் சென்றபோது உருதுபாஷையில் ஜெர்மானியருக்கு எழுதப்பட்ட ஒரு பாடலில் பின்கண்ட மூன்று நல்ல அபிப்பிராயங்கள் காணப்பட்டன.

1. **கடந்த மகாயுத்தத்தை மறந்தீர்களா?**
2. **அதிகம் ஆசைப்பட ஆசைப்பட நீங்கள் கீழே விழுகிறீர்கள்.**
3. **அப்போது உங்களை நாங்கள் தோற்கடித்த விதத்தை ஞாபகத்தில் வைத்திருக்கிறீர்களா?**

## நான்கு நிச்சயங்கள்.

இதுதான் சரியான உணர்ச்சி. இவ்வுணர்ச்சி இந்தியாவில் பூராவும் இருக்க வேண்டும். காரியங்கள் அதிக சாதகமாக இல்லாத சமயத்திலும், சந்தேகமும் நிச்சயமற்ற தன்மைகளும் ஏற்படும்பொழுதும் இந்த யுத்தத்தில் நிச்சயமான அம்சங்களை கவனிப்பது நலம். நேசநாடுகளின் படியாத உணர்ச்சி, டங்கர்க் வீரர்கள், பிரிடனை பாதுகாக்கிறவர்கள், இது முதலாவதான நிச்சயம். ருஷ்யா சைனு, சைனியங்களின் தீரமான எதிர்ப்பு இவைகள் இரண்டாவது நிச்சயம். அமெரிக்காவின் குறையாத சாமான்கள், மேலான தைரியம், இது ஒரு நிச்சயமான அம்சம். கடைசியாக வெற்றியைப்பற்றிய நிச்சயம்.

இந்த நிச்சயாம்சங்களை இந்தியாவிலும் ஸிலோனிலும் உள்ள நீங்கள், உங்களால் முடிந்த சக்தியுடன் உதவினால் வெற்றி நமக்கு சீக்கிரம் கிடைக்கும்.

இந்த யுத்தத்தை ஒருமணிநேரம் குறைவாகச்செய்தாலும், ஏராளமான பேர்கள் பிழைப்பார்கள். லக்ஷகணக்கான ஜனங்களுக்கு ஹிம்ஸையும் இல்லை.

## இது உங்களுடைய யுத்தமே.

"இது யாருடைய யுத்தமோ, நமக்கு ஒரு சம்பந்தமுமில்லை" என்று ஒருவரும் நினைக்கமுடியாது. எல்லா அம்சத்திலும் இது உலக யுத்தம். இந்த யுத்தத்தை விரும்பியோ, விரும்பாமலோ, இதனால் தீண்டப்படாத தேசமே கிடையாது. இதன் தன்மைகளை அனுபவிக்காத குழந்தையோ, ஸ்திரீ புருஷனோ கிடையாது. இனி உண்டாகப்போகும் சந்ததிக்கும் இதனால் பாதகம் ஏற்படும். பிரயத்தனம் எடுத்துக்கொள்ளாமல் கையைக்கட்டிக்கொண்டு யுத்தத்தின் போக்கைப் பார்த்துக்கொண்டு ஒருவரும் இருக்கமுடியாது. இந்த யுத்தம் முன்னேற்றம், நாகரீகம், கலை முதலியவைகளுக்கும், பின் போக்கு, காட்டுமிராண்டித்தனம், அஞ்ஞானம் முதலியவைகளுக்கும் நடக்கிறது.

தங்களுக்கு ஏற்பட்டுள்ள புராதன பழக்கமும், வேதாந்தம், கலை, பயிற்சி முதலியவைகளின் தன்மையுடனும் கூடிய இந்தியாவும், ஸிலோனும் எந்தப் பக்கம் சேருமென்பதில் சந்தேகமில்லை.

### மாறுபாடுகளைக் கவனிக்காதீர்கள்.

உங்களுக்குக் காணப்படும் வித்யாசங்களை மறந்து ஒரு மனிதனைப் போலிருந்து நேசநாடுகளின் பக்கம் சேர்ந்துகொள்ளுங்கள். உங்களுடைய வீடு வாசல்களுக்காகவும், பயிற்சிக்காகவும், சந்ததி கௌரவத்திற்காகவும் சண்டை செய்யுங்கள். நாம் முழுவெற்றியடைந்தால்தான் இந்த கொடிய யுத்தம் முடியும்.

பாஸிஸ்டு கொள்கை, நாஸிக் கொள்கை, ஜப்பானிய அதிகார ஆசை இவைகளை படுகுழிகளில் புதைத்து, மறுபடி கிளம்பி உலகத்திற்குத் தீங்கு விளைவிக்காதபடி செய்யவேண்டும்.

நம்மளில் எவ்வளவு அதிகமான பேர்கள் இதில் ஈடுபடுகிறோமோ, அவ்வளவு சீக்கிரத்தில் அவைகளை ஒழிக்கலாம்.

### புது உலகத்தை அமையுங்கள்.

இந்த யுத்தம் முடிந்ததும் நமக்குள் இருக்கும் நல்லெண்ணம், ஒத்துழைப்பு இவைகளைக்கொண்டு நாம் யாவரும் புது உலகத்தை சிருஷ்டித்து, பரஸ்பரம் காணப்படும் சிநேக பந்தத்தை புதுப்பித்துக்கொண்டு, பொது முயற்சி, தியாகம் முதலியவைகளால் அழியாத நட்பை உண்டு பண்ணுவோம்.

எல்லோருக்கும் வந்தனம். உங்கள் யாவருக்கும் நல்ல அதிர்ஷ்டம் உண்டாகுக.

---

# பெல்ஜிய தேசீய தின விழா (ஜூலை 21),

## செய்திகள்.

## I

### பெல்ஜிய அயல்நாட்டு மந்திரி மிஸ்ட்டர் ஸ்பாக்.

'1940 வருஷத்தை ஜெர்மனி பயன்படுத்திக்கொள்ளாதபோது மறுபடி அந்த சந்தர்ப்பம் ஜெர்மனிக்குக் கிடைக்காது. முஸ்தீப்பு பெருமல், தனியாக இருந்த சமயத்தில் இங்கிலாந்தை ஜயிக்க முடியாதபோது சரியாக பலம்பெற்று, ருஷ்யா, அமெரிக்கா முதலிய நாடுகளின் பலமும் இருப்பதால் தற்சமயத்தில் தோற்கடிக்கவே முடியாது.

"தைரியத்துடன் இருங்கள். நேசநாடுகளைவிட்டு வெற்றி ஒரு நாளும் போகாது. நேசநாடுகளின் வெற்றியாவது பெல்ஜியத்தின் விடுதலைதான்.

"மறுபடி பெல்ஜியம் தனது நாட்டை அடையுமென்பதைக் குறிக்கும் பழமொழியைக் கூறுவோம். "பெல்ஜியமும் பெல்ஜிய மன்னரும் நீடூழி வாழ்க".

## II

### பெல்ஜியத் தற்காப்பு மந்திரி மிஸ்ட்டர் காமில்லே.

"ஒரு வருஷத்திற்கு முன்பு எல்லாம் பயங்கரமாகத் தோன்றியது. இருந்தாலும் வெற்றியில் நம்பிக்கையிருந்தது. தற்சமயத்தில் வெற்றி நெருங்கி வருவதைக் காண்கிறோம்.

"அதிக நஷ்டத்தின்பேரில் ஏராளமான இடத்தை ஜெர்மனி கைப்பற்றியிருந்தாலும் ஆக்கிரமித்த இடங்கள் வசப்படவில்லை. தற்சமயத்தில் அவைகளை ஸ்வாதீனப்படுத்தாவிடில் இனிமேல் முடியவே முடியாது. ஏனென்றால் அமெரிக்கா சண்டையில் ஈடுபட்டு சாமான்களையும், துருப்புகளையும் அனுப்புகிறது.

"மற்ற தினங்களைக் காட்டிலும் விசேஷமான நமது பாதுகாப்பு தினத்தில், நமது எண்ணங்களெல்லாம் சின்னாபின்னமாக்கப்பட்டதும், தற்சமயம் தேசாபிமானமே ஒரு குற்றமாகக் கருதப்படுவதுமான நமது நாட்டைப்பற்றியும், நமது

நாட்டை பரம் பரையாகக் காப்பாற்றும் அரசரைப் பற்றியும், எதிரியின் கொலைகளை எதிர்த்துப் போராடும் நமது நாட்டினரைப் பற்றியுமே உண்டாகின்றன.

"யாவருக்கும் நமது சைனியம் சொல்லுவது யாதெனில்: 'கஷ்ட நிலைகள் போய்விட்டன. இனி தைரியம்தான் தேவை'. நமக்கு நல்ல காலம் வந்ததும் ஜெர்மானியர் பயந்து ஓடுவதையும் நாம் மறுபடி ராஜ்யத்தைப் பிடிப்பதையும் பார்ப்பீர்கள்".

---

# தேசிய யுத்த முன்னணி.

# ஐக்கிய பத்தியம் அடைவது.

(ஸர் ராபர்ட் டெனிஸ்டன் ஆல் இந்தியா ரேடியோவில் ஒலிபரப்பியது).

### கடவுளைப் பழித்தல்.

பொய் சொல்வதில் ஏற்படக்கூடிய பயனானது அந்தப் பொய்யின் தன்மையைப் பொருத்திருக்கிறது. இந்த வகையில் அதற்குத் தக்கபடி ஜெர்மானியர் நடந்து வருகிறார்கள். ஜெர்மன் ஒலிபரப்பில் தயக்க மன்னியில சிறிது முதல் பெரிதுவரை பொய் சொல்லி வருவதைக்கேட்டிருக்கிறோம். பொய் சொல்வதற்குப் பரிசு கொடுப்பதாய் இருந்தால் ஜெர்மன் ஒலிபரப்புவருக்குத்தான் கொடுக்கவேண்டும். "ஜெர்மானியர் எந்த தேசத்தில் செல்லுவார்களோ அந்த தேசமானது கடவுளின் சோலையாக ஆகி விடுகிறது" என்று அவன் சொல்லுகிறான்.

இந்த வாக்கியத்தைப்பற்றி விசாரித்துப் பார்ப்போம். போலந்தில் நிரபராதியான மக்களை தூக்கில் போட்டும், அவ்விதம் தொங்கிக்கொண்டிருக்கும் போலிஷ் நகரவாசிகளின் படங்களையும் தங்களுடைய புதை குழிகளைத் தாங்களே வெட்டிக்கொண்டிருக்கும் போலந்துக்காரர்களின் படங்களையும் நீங்கள் பார்த்து இருக்கிறீர்கள். ருஷ்யாவில் ஜெர்மானியர் செய்த நம்பத்தகாத அக்கிரமங்களைப் பற்றி மிஸ்டர் மாலடோவின் குற்றச் சாட்டுகளைப் படித்திருக்கிறீர்கள். மேலும் ஹிட்லரின் ஏஜெண்டான ஹீட்ரிச்சைக் கொலை செய்ததற்காக எவ்வளவோ நூற்றுக்கணக்கான செக்கர்கள் கொலை செய்யப்பட்டதைப் பற்றியும் படித்திருக்கிறீர்கள். ஜெர்மன் ஆகாயப் படையால், ஹாலந்தும், பெல்ஜியமும் அழிக்கப் பட்டது உங்களுக்கு ஞாபகம் இருக்கும். ஜெர்மனியிலுள்ள பைத்தியக்காரனின் செய்கையால் இன்னும கோடிக்கணக்கான ஏழை மக்கள் பசிப்பிணியால் வருந்துவதையும் நீங்கள் மறக்கமாட்டீர்கள். இப்பொழுது ஜெர்மனியில் 22,50,000 அந்நிய வேலைக்காரர்களைக் கட்டாய வேலை செய்யும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இன்னும் உபரியாக 12,50,000 கைதிகளும் ஜெர்மனிக்காக வேலை செய்வதில் ஈடுபட்டிருக்கிறார்கள். நார்வேயில் 10 முதல் 15 வயது வரையுள்ள குழந்தைகள் பிணையாளிகளாகச் சமீபத்தில் கொண்டுபோகப்பட்டிருக்கிறார்கள். பிரான்ஸில் பெற்றோர்கள் செய்த குற்றத்திற்காக அவைகளின் குழந்தைகள் கைதிகள் சீர்திருத்தப் பள்ளிக்கூடங்களில் கொண்டு போகப்பட்டார்கள். இவ்விதமாக நாஸிகள் செய்து வரும் அட்டூழியங்களை மனதினாலும் எண்ணுவதற்கு முடியாது.

இதையெல்லாம் பார்த்த பிறகு ஜெர்மன் ஒலிபரப்புவன் அலக்ஷியமாகப் பேசுவதற்கும் இழிவான குணத்திற்கும் கடவுள் சிருஷ்டியைப் பழிப்பதற்கும் அவனுக்குப் பரிசு கொடுப்பதற்கு நீங்களும் ஒப்புக்கொள்வீர்கள்.

கிழக்கு அர்த்த கோளத்தைப் பார்க்கையில் தாத்காலிகமாக ஜப்பானியர் ஆக்கிரமித்த நாடுகளிலும் வாழ்கை இதைக் காட்டிலும் மேன்மையாக இருக்கிறதா? ஜப்பானியர் சொல்படி நடக்கும் ஸயாம் தலைவர், மார்ஷல் ஸாங்கராம் கண்ணீர் விட்டுக்கொண்டு மிகவும் வருத்தத்துடன் ஒலிபரப்பியதில் சில வாக்கியங்களை மட்டில் இங்கு சொல்லுகிறேன்.

"நீங்கள் பேச்சுரிமையை இழக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டாரின் அபிப்பிராயத்திற்கு நீங்கள் எல்லோரும் ஏகோபித்து ஆமோதிப்பீர்கள் என்று நான் நம்புகிறேன்", என்று நடுநடுங்கும் குரலுடன் பேசினன். மேலும் "மிகவும் நெருக்கடியான காலத்தில் நீங்கள் உங்கள் உணவைத்" தயார் செய்து கொள்ளாமல் போனல் நிச்சயமாக நீங்கள் பட்டினியாயிருந்து சாகவேண்டியது தான். அதனல் வருங்காலத்தில் சந்தோஷமாய் வாழ விரும்பினல் உங்களால் முடிந்தவரையில் வேலை செய்யுங்கள் என்று நான் கெஞ்சிக்கேட்டுக்கொள்ளு கிறேன். நீங்கள் தைரியமாய் இருக்கவேண்டும். பூமியில் பிறந்தவர்களுக்கு எப்பொழுதிருந்தாலும் இறப்பது நிச்சயமே. அதனல் உயிர் விடுவதிலும் ஒற்றுமையாக இருப்பது நலம் என்பதை ஞாபகப்படுத்திகொள்ளுங்கள்" என்று சொன்னன். ஸயாமையும் கடவுளுக்குகந்த சோலையாகச் செய்து விட்டதாக ஜப்பானியர் சொல்லிவரலாம். ஆனல் இந்தத் தடவையில் அது ஜப்பானியரின் சோலையாக மாறிவிட்டது. மேலும் அவர்கள் மஞ்சூரியாவை எவ்விதம் தங்க ளுக்கு அனுகூலமாகச் செய்துகொண்டார்கள் என்று சீனர்கள் விவரித்துச் சொல்லக்கூடும்.

ஜப்பான் ஆக்கிரமித்த நாடுகளில் ஜப்பானியர் எவ்விதம் நடந்துகொண்டார் கள் என்று ஜப்பானிய அட்டூழியங்களைப் பற்றிய கதைகளைப் படித்திருப்பீர்கள். உண்மையாக நடந்த ஒரு சம்பவத்தை இங்கு குறிப்பிடுகிறேன். பர்மாவிலிருந்த பிரிடிஷ் உத்தியோகஸ்தர் ஒருவரை ஜப்பானியர் கைப்பற்றிக்கொண்டார்கள். பிற்பட்டு அவர் தப்பி ஓடிவிட்டார். மீண்டும் அவர் கைப்பற்றப்பட்டார். அதன் பேரில் அவர் கணைக்கால்கள் இரண்டும் துண்டிக்கப்பட்டன. இதில் முக்கியமாகக் கவனிக்கத் தகுந்த விஷய மென்னவென்றால், கால்கள் முடமாகியும் அவ்வுத்தி யோகஸ்தர் மறுபடியும் எதிரி வசமிருந்து வெகுதந்திரமாக தப்பி வந்துவிட்டார். எதிரி ஆக்கிரமிப்பினல் ஏற்படக்கூடிய கொடுமைகளை நாம் அனுபவிக்காமல் இப்பொழுதே நம்மைத் தயார் செய்து கொள்ளவேண்டியது அவசியம். இந்தக் காலங்களில் ஓட்டைப் பாத்திரத்திலிருந்து நீராவி எப்படி குப், குப் என்று வெளியே வருமோ அம்மாதிரி ஒவ்வொருவரும் பேச்சுப் பேசுகிறார்கள். அவர்கள் சொல்வதில் பெரும்பாலும் பிரயோஜனமற்றது. சொன்னதையே திரும்பச் சொல்லப்படுகிறது. கேட்க அருவெறுப்புக் கொடுக்கக்கூடிய விஷயம் அதில் அதிகம். இருந்தபோதிலும் ஏதாவது ஒரு சமயத்தில் குறிப்பான ஒரு வாக்கி யமோ, வார்த்தையோ அதில் இருக்கும். Mr. ராம்பீர்ஸிங் ஜோஷ் பிரகடனத்தி லிருந்து நான் சொல்லுகிறேன. நமக்கும் ஜப்பானிய பாஸிஸ்டு கக்ஷியாருக்கும் பொதுவான ஸ்தலம் யுத்தரங்கம்தான். அவர்கள் நம் நாட்டை ஜயித்து நம் ஜனங்களை அடிமையாக்கி வருகிறார்கள். நாம் அவர்களுக்கு பூமியை விட்டுக் கொடுப்போம். அதாவது இந்தியாவில் அடிவைக்கும் ஒவ்வொரு குள்ளனுக்கும் புதைகுழிக்காக $4\frac{1}{2}$ அடி இடம் கொடுப்போம்" என்று சொன்னர். இது எனக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கிறது. நீயும் அதை விரும்பமாட்டாயா? அதில் வீரம் இருக்கிறது.

## தேசிய யுத்த முன்னணி.

எதிரிகளை விவரிப்பதற்கு வார்த்தைகளைப் பொருக்குவதில் நமக்குத் திருப்தி கொடுத்தாலும் அந்த வார்த்தைகள் ரேடியோவில் பேசுவதற்கு உகந்ததாக இல்லாமலிருப்பது பரிதாபமாக இருக்கிறது. அந்த வார்த்தையினல் ஒரு பிர யோஜனமுமில்லை. போயர் யுத்தத்தில் 'பேச்சினல் க்ரூஜரைக் கொல்லுகிறோம்,' என்று கிப்ளிங் விவரித்தார். அதைக் காட்டிலும் மேலானதை நாம் விரும்பு கிறோம். அதைக் காட்டிலும் மேலான வார்த்தையும் இருக்கிறது. அதற்குத் தான் தேசிய யுத்த முன்னணி என்று பெயர்.

அது என்ன? முதன் முதலாக அதன் நோக்கம் என்னவென்றால் வல்லரசுகள் செய்யக்கூடிய கெட்ட செய்கைகள் பூராவையும் முற்றிலும் அழித்துவிடவேண்டும் என்பதுதான். ஏனெனில் நாஸிக் கொள்கை, பாஸிஸ்டு கொள்கை, இன்னும் ஜப் பான் ஆதரிக்கும் எத்தகைய கொள்கையும் இருக்கும் வரையில் உலகத்தில் அக்கிர மம்தான் நீடிக்கும். நல்ல எண்ணங்கொண்ட ஒவ்வொரு ஆணும், பெண்ணும் இவ்

உலகத்தில் பெரியவன், சிறியவன் வரை தேசிய யுத்த முன்னணியில் மெம்பராக இருக்கலாம். நீ அதில் சேர்ந்தால் மேன்மை தங்கிய கவர்னர் 'ஒற்றுமைப் படுத்துவது,' என்று சந்தோஷகரமான வார்த்தையைக் கண்டுபிடித்துச்சொன்ன படி ஒற்றுமையை அடையப் பிரயத்தனப்படும் ஸ்தாபனத்தில் மெம்பராகிறாய். இந்த ஸ்தாபனத்தில் ஆக்கிரமிப்புக்காரர்களின் கொள்கையில் வெறுப்புக் கொள்கிறவர்களுக்கும், காட்டுமிருண்டிகளின் முறைகளுக்கும், காட்டில் வசிக்கும் மிருகங்களுக்கு மேலாக மனித வர்க்கத்தாரின் நெறிமுறைகள் இருக்கவேண்டுமென்று நம்பிக்கை கொள்ளுகிறவர்களுக்கும் இடமுண்டு. அதில் சேருகிறவர்கள் ஜாதி, மதம், குலம், கோத்திரம், ராஜீய அபிப்பிராயங்கள் இவைகளில் வித்தியாசம் பார்ப்பதில்லை. உலகத்தில் ஏற்பட்டிருக்கும் அட்டூழியத்தைப் போக்க விரும்புகிற ஆண், பெண்களே அதில் மெம்பர்கள்.

## எதிர்ப்பே தவிர தற்காப்பில்லை.

வாக்குறுதி கொடுப்பதில் எனக்கு அதிக விருப்பமுண்டு. ஆனால் இப்பொழுது எனக்கு நம்பிக்கையில்லை. ஏனென்றால் அது ஆடம்பரத்திற்காக மட்டில் செய்யப்படுகிறது என்று எண்ணவேண்டியிருக்கிறது. ஆனால் தேசிய யுத்த முன்னணிக்கு ஒரு திண்ணமான நோக்கமிருக்கிறது. அந்தக் கருத்தை வார்த்தைகளைக்கொண்டு வெளியிடுவது சாவதானமானது. அதில் ஒவ்வொருவரும் பின்வருமாறு உறுதி எடுத்துக்கொள்ளவேண்டும்.

"இந்தியா வாஸியாக இருப்பதில் எனக்குப் பெருமையிருக்கிறது. அதனால் தோற்று விடுவோம் என்ற பீதியை ஒழித்துவிடவும், திகில் உண்டாக்கும் வதந்திகளை அமுக்குவதற்கும் நான் பிரயத்தனப்படுவதாக வாக்குறுதி கொடுக்கிறேன். இந்தியா தேசத்தின் கௌரவத்தையும், பாதுகாப்பையும் குறைக்க நேரிடும் ஒவ்வொரு அபிப்பிராயத்தையும் நான் எதிர்த்துப் போராடுகிறேன். நாளுக்குநாள் நிச்சயமாக வெற்றி கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் வேலை செய்கிறேன்."

இவ்வளவுதான். இது சரியானது அல்லவா? இந்த உறுதி மொழியில் **எதிர்ப்பு** என்ற வார்த்தையை மனதில் பதிய வைத்துக்கொள்ளும்படி விரும்புகிறேன். பாதுகாப்பு என்ற வார்த்தை சமீப காலத்தில் தான் அடிக்கடி நமது காதில் விழுகிறது. ஆனால் இந்த உறுதிமொழியில் அந்த வார்த்தை தோன்றவில்லை. ஆகையினால் தேசிய யுத்த முன்னணியின் கொள்கை என்னவென்றால் **எதிர்ப்பு, தாக்குதல், விரட்டுதல்** என்பதேயாம். ஆமாம், இந்த வார்த்தைகள் எல்லாம் வெகு நன்றாகத்தானிருக்கிறது. இவைகளெல்லாம் படைகளுக்கு அதாவது சண்டையிடும் மனிதர்களுக்குத்தான் அன்வயிக்கும் என்று நீ சொல்வாய்? சென்ற யுத்தத்தில் மார்ஷல் போக் (Fock) என்பரை ஞாபகமிருக்கிறதா? பொதுமக்கள் மட்டில் சமாளித்திருந்தால் அவர் ஜயிக்கக்கூடுமென்று சொன்னார். சென்ற யுத்தத்தைக் காட்டிலும் இந்த யுத்தத்தில் பொதுமக்களின் உணர்ச்சிதான் மிகவும் முக்கியமானது. ஜெர்மானியரின், வெற்றி மேலெழுந்தவாரியாக இருந்தபோதிலும், பொதுமக்கள் பேரில் யுத்தம் தொடுக்கும் ஆபாசமான யுத்த தந்திரத்தினால்தான் அது கிடைத்தது. மற்றவைகளைக் காட்டிலும் பொதுமக்களின் உணர்ச்சிக் குறைவால்தான் பிரான்ஸ் வீழ்ந்ததற்குக் காரணம். 20 வருஷங்களுக்கு முன்னால் வெர்டூனி (Verdun)ல் ஜெர்மானியர் நிற்கக்கூடாது என்று வயது முதிர்ந்த வீரன் சொன்னது நம்பப்படவில்லை. பிரான்ஸூம் அப்படியே நினைத்தது. நமது எதிரிகள் பொதுமக்களையே தாக்கி அவர்கள் உணர்ச்சி குறையும்படி செய்தார்கள்.

உலகத்தில் இந்த பாகத்தில் பொதுமக்கள் உணர்ச்சி குறையும்படி செய்து எதிரியின் தாக்குதல் இப்பொழுது எவ்வளவு தூரம் பலித்திருக்கிறது. மலேயாவிலிருந்தும், பர்மாவிலிருந்தும் திரும்பி வருபவர்கள் சொல்வதை நம்பினால் இந்தத் தந்திரம் பலித்திருக்கிறதென்றே சொல்லவேண்டும். முக்கிய வேலைகளெல்லாம் ஒழுங்கீனமாக்கப்பட்டன. நிர்ப்பந்தத்தினால் பொதுமக்கள் ஒரு இடத்தில் நிலைத்துநிற்க முடியவில்லை. நான் பெரும்பாலாகத்தான் சொல்லுகிறேன்.

தனிப்பட்ட நபர்கள் அதிக தைரியத்துடன் இருந்திருக்கலாம். கடமையைத் தவிரவிடாமல் அநேகம் பேர்கள் செய்திருக்கலாம். ஆனல் எதிரி எதிர்பார்த்த படி சாதாரண ஜனங்கள் நெறிமுறையைத் தவறினதினுல்தான் அங்கு பாதகம் உண்டாயிற்று.

## இந்தக் கொடிய வார்த்தை.

விஸ்தாரமாக நான் சொன்ன தேசிய யுத்த முன்னணியின் வாக்குறுதியைப் பரிசோதிப்போம். "தோல்வி ஏற்படும் என்ற பயத்தை அடியோடு அழிக்கவும் பீதி உண்டாக்கும் வதந்திகளை அமுக்கி விடவும்," என்று நான் உறுதி கூறு கிறேன். ஆனல் ஏதோ நாம் மனக்கோட்டை கட்டிக்கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. இந்த யுத்தத்தில் அநேக நூதன வார்த்தைகள் உண்டாகி யிருப்பதில் இது எல்லாவற்றைக் காட்டிலும் கொடிதானது. ஏனென்றல் இம்மாதிரி உறுதி கூறுகிறவர்கள் ஜயம் பெறுவார்கள் என்பது நிச்சயமில்லை. இதை நினைத்தாலே இந்த வார்த்தை மிகவும் அபாயகரமாகத் தோன்றுகிறது. நாம் இந்த யுத்தத்தில் தோல்வியடைய மாட்டோம் என்றே நினைத்துக்கொள் வோம். ஆனல் மனித சுபாவத்தில் செய்தி சொல்வதில் சந்தோஷமடைகிறோம். அந்தச் செய்தி கெட்டதாக இருந்தாலும், அதைச்சொல்ல நமக்குத் தெரிந்ததற் காக ஒருவித அருவெறுப்பான திருப்தியும் ஏற்படுகிறது. ரகசியமாகவும், பீதி உண்டாக்கும் விதமாகவும் நீ இதை கேட்டாய் என்று சொல்லிக்கொண்டு வரும் மனிதனிடத்தில் நீ உஜாராக இருக்கவேண்டும். அவன் சொல்லும் செய்தி கெட்டதாக இருந்தால் அதற்கு மூலாதாரத்தைக் கேள். 10 செய்திகளில் 9 செய்திகளுக்கு அவனல் ஆதாரம் சொல்லமுடியாது. அப்பேர்ப்பட்டவனை கோயபல்ஸுக்கு உதவி செய்கிறவன் என்று அவனைச் சொல்லாம். அவன் அதை விரும்பமாட்டான். ஆனல் அது உண்மையே.

## இருந்த இடத்திலேயே இருப்பது.

இந்தியாவின் கௌரவத்தையும் பாதுகாப்பையும் குறைக்கவிருக்கும் ஒவ் வொரு அபாயத்தையும் எதிர்த்துத் தடுக்கிறேன் என்று வாக்குறுதி செய்த பொழுது நாம் இடத்தை விட்டு அகலாமலே இருக்கிறோமென்ற உறுதி மொழி யையும் கூறுகிறோம். ஏனென்றல் அபாயம் இருக்கும் பிராந்தியத்தை விட்டு நாம் வெளியேசென்று விட்டால் அபாயங்களைக்கண்டு நாம் சமாளிக்க முடியாது. நமக்கு எப்பொழுதும் ஏற்பட்டிருக்கும் அபாயங்களைக் காட்டிலும் பேராபத்துக்கு உட்பட்டிருக்கும் ஜனங்கள் கோடிக்கணக்காக இருக்கிறார்கள் என்பதை ஞாபக மூட்டிக்கொள்ளவேண்டும். ஆகையால் நம்முடைய வேலைகளை நாம் செய்யத் தவறினல் யுத்தப் பிரயத்தனத்தை நாம் குறைவுபடுத்துகிறோம் என்ற அறிவி லேயே நாம் நம் வேலைகளைச் செய்யவேண்டும். ஒவ்வொருவரும் எவ்வளவு தூரம் யுத்தப் பிரத்தனத்திற்கு உதவியளிக்கலாம் என்பதை Mr. A. A. மில்னே என்பவர் எழுதியிருக்கும் கவியில் வெகுநேர்த்தியாக திரட்டப்பட்டிருக்கிறது. அந்தக் கவியின் சுருக்கம் பின்வருமாறு:

"நீ தேசிய யுத்த முன்னணியில் சேருகிறாயா?"

நன்மைக்கும், தீமைக்கும் இந்த யுத்தம் நடைபெறுகிறது. கடவுளுக்கும் சைத்தானுக்கும் இந்த யுத்தம் நடக்கிறது. நீ எந்த பக்கத்தில் இருக்கிறாய்? எந்த திரப்பை நீ பொருக்கியிருக்கிறாய்? போர் செய்யும் வீரர்களை வாழ்த்திவிட்டு வேறு பக்கம் போவது போதுமா? ஸ்திரீகள் அழுதுவிட்டு குற்றமற்றவர்கள் இறக்கும்பொழுது "பரிதாபப்படக்கூடியவர்கள், ஐயோ பாவம், என்று சொன் னல் மட்டும் போதுமா? உங்கள் பிரார்த்தனைகளைச் செய்துவிட்டு உங்கள் சொந்த ஜோலியாகப்போனல் போதுமா? எது அபூர்வம் என்று நீ கருது கிறாயோ அதற்காகத்தான் இந்தப் போர் நடக்கிறது. எதைப்போர் செய்து நீ அடைந்தாயோ அதற்காகத்தான் இந்தச் சண்டை நடக்கிறது. யுத்தமோ நடந்து வருகிறது. அதில் வரக்கூடியது என்னதென்று தெளிவாகயிருக்கிறது. நன்மை, அல்லது தீமை; கடவுள் அல்லது சைத்தான். நீ இதில் சேருகிறாயா?"

# சமயத்திற்கேற்ற சம்பந்தம்.

(ஜான் மாக்டோனல்ட் என்பவர் எழுதியது.)

ஜப்பானும், ஜெர்மனியும் ஒன்றுக்கொன்று அனுதாபம் காட்டியும், தங்களால் முடிந்தவரையில் உதவிசெய்தும் வருகின்றன என்பதற்கு போதுமான சாக்ஷிய மிருக்கிறது. ஆனால் இவ்வாறு அச்சு நாடுகளின் நோக்கங்கள் ஒற்றுமையாயில்லை என்பதற்கும் வேண்டிய சாக்ஷியமும் இருக்கிறது. உண்மையில் அவ்விரு நாடு களும் தத்தம் சுயநலத்திற்காகத் தனித்தனியே பாடுபட்டுவருகின்றன. ஜப்பானியர்கள் நாஸிகளால் ஆட்டிவைக்கும் வெறும் பொம்மைகள் அல்ல. தங்கள் சாம்ராஜ்யத்தை அதிகப்படுத்தவே இந்த யுத்தத்தில் அவர்கள் ஈடு பட்டிருக்கிறார்கள். ஜப்பான் யுனைடெட் ஸ்டேட்ஸையும், பிரிட்டனையும் ஏக காலத்தில் தாக்கியபொழுது, தனக்குக் கூட்டாளி என்று சொல்லக்கூடிய ஜெர்மனியையும் சேர்த்து எல்லாவற்றையும் ஆபத்துக்குள்ளாக்கிக்கொண்டு அது தன் சுய நலத்திற்காகவே போர் தொடங்கிற்று.

பேர்ல் துறைமுகத்தையும், மலேயாவையும் தாக்கியபொழுது அதன் நேச நாடான ஜெர்மனியிடமிருந்து எதிர்பார்க்கக்கூடிய யுத்த தந்திரத்தைக்கூட ஜப்பானியர்கள் புறக்கணித்துவிட்டார்கள். அதேபோலவே ருஷ்யப் போர் முனையில் ஜெர்மன் சைனியங்களுக்கு ருஷ்யர்கள் கொடுத்துவரும் நிர்ப்பந்தத்தைக் குறைக்கவும் ஜப்பானியர்கள் பிரயத்தனப்படவில்லை. மேலும் ஜெர்மனியிலுள்ள தொழிற்சாலை நிறைந்த பிரதேசங்களை முறைதவராமல் பிரிடிஷ் பாம்பர் விமானங்கள் தாக்கிவருவதைத் திருப்பிவிடவும் ஜப்பான் பிரயத்தனப்படவில்லை. இதற்கு மாறாக சென்ற 30 வருஷ காலமாக அவர்கள் போட்ட வேலைத் திட்டப்படி நாடுகளைக் கைப்பற்றுவதையேக் கருதி நடத்திவந்தார்கள்.

## ருஷ்யாவுடன் ஒப்பந்தம்.

இவ்விரு அச்சு நாடுகளுக்குள் இதற்குமுன் ஒற்றுமையான நெருங்கிய சிநேகிதம் இருந்தது என்று சொல்லுவதற்கில்லை. அவ்விதம் இருக்கும்பக்ஷத்தில் பிறர் உதவியன்னியில் ஜெர்மனி 1941-ம்ஹூ ஜூன்மீ ருஷ்யாவுடன் போர் துவக்கி தனிமையில் யுத்தம் செய்துவரும்பொழுது, அதுமுதல் டிஸம்பர் மாதம் வரை ஜப்பான் யுத்தத்திலிறங்காமல் ஏன் காத்திருக்கவேண்டும்?

இதற்கு நேர் விரோதமாக விஷயங்கள் நடந்துவிட்டன. ஜப்பான் ருஷ்யாவுடன் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டது. அதன்படி ஒன்று மற்றொன்றுடன் போர் துவக்கக்கூடாதென்ற நிபந்தனையும் ஏற்பட்டது. பொதுவாக அச்சுநாட்டு வல்லரசுகள் இதற்குமுன் வேறெந்த நாடுகளுடன் செய்துகொண்ட உடன்படிக்கைகளையோ, ஒப்பந்தங்களையோ, முற்றிலும் புறக் கணித்து விடுமென்பது யாவருக்கும் தெரிந்தது. ஆனால் தாத்காலிகமாக ருஷ்யாவுடன் ஜப்பான் ஏற்கனவே செய்துகொண்ட உடன்படிக்கையை நிலை நிறுத்திவைப்பதற்கு அறிகுறிகளை ஜப்பான் காட்டிவருகிறது.

ஜப்பான் ருஷ்யாவுடன் சமாதானத்துடன் இருப்பதாக செய்துகொண்ட ஒப்பந்தம் ஒருபுறமிருக்க, ருஷ்யர்களுடன் தலையிடாமல் இருப்பதற்கு வேறு இரண்டு காரணங்களுமுண்டு. அவையாவன:—(1) விளாடிவாஸ்டாக் துறைமுகத் திலிருந்து ருஷ்யாவின் பாம்பர் விமானங்கள் ஜப்பானிய முக்கிய தொழிற்சாலைப் பிரதேசங்களுக்கும், கப்பற்படை தளங்களுக்கும் பறந்து சென்று வெடிகுண்டுகளை வருஷித்து அதிக சேதம் விளைவிக்கக்கூடும். (2) அடுத்தபடியாக கிழக்கு ஆசியாவிலும், தெற்கு பஸிபிக் பிராந்தத்திலும் ஆதிக்கம் அடையவேண்டு மென்று அநேக வருஷங்களாக ஜப்பான் திட்டம்போட்டு வருகிறது. அவ்விதம் ஆதிக்கம்பெற்றால் யுத்தம் முடிந்தபிறகு மேற்கு பாகத்திலுள்ள வல்லரசுகள் ஜப்பானிய சாம்ராஜ்யத்தை குலைக்கவேமுடியாது. சாம்ராஜ்ய ஆசையினால் ஜப்பான் ருஷ்யாவுடன் சமாதானமாக இருக்கவேண்டிருக்கிறது.

### நல்ல சந்தர்ப்பம்.

மேற்குப் போர்முனையில் ஜெர்மனியுடன் ருஷ்யா யுத்தத்திற்கு இறங்கியதும், யுனைடெட் ஸ்டேட்ஸின் கப்பற்படையில் பெரும்பாகம் அட்லாண்டிக் சமுத்திரத்தில் வந்ததும், அநேக வருஷங்களாக ஜப்பானியர்கள் எதிர்பார்த்திருந்த சந்தர்ப்பம் வாய்த்தது.

அவ்வித சந்தர்ப்பத்தை ஜப்பான் உடனே உபயோகித்துக்கொண்டது. மேலும் இதற்கு அனுகூலமாக ஜப்பான் கண்டு பயப்படும் பெரிய வல்லரசுகள் வேறுவிதமாக யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும்பொழுதே ஜப்பானியர்கள் தங்கள் முழுபலத்துடன் யுத்தத்தில் இறங்கிவிட்டார்கள். அவர்கள் ஜயம்பெற்ருல், இதற்குப்பின்னுல் தாங்கள் ஸ்தாபித்த தூரக்கிழக்குச் சாம்ராஜ்யத்தை, ஜெர்மனியாவது, அல்லது பிரிடன் போன்ற மற்ற வல்லரசுகளாவது படையெடுக்க முடியாமல் பாதுகாப்பு செய்துகொள்ளமுடியும் என்று நம்பினுர்கள். நேச நாடுகளில் ஏதேனும் ஒன்று தன்னை எதிர்க்கக்கூடும் என்று ஜப்பான் எண்ணியது போலவே ஜெர்மனியும் யுத்தத்தில் ஒருக்கால் வெற்றியடைந்ததும் தன்னைத் தாக்கும் என்று எண்ணிற்று. உண்மையில் அது ஜெர்மனியின் நோக்கத்தைத் தெரிந்துகொண்டு விட்டது.

ஜப்பானிய திட்டங்கள் என்னவென்பது முன்னுலேயே ஹிட்லருக்குத் தெரியவில்லை. ஜப்பான் தாக்குதல் ஆரம்பித்தபிறகு அதனுல் ஜெர்மனியில் ஏற்பட்ட குழப்பத்திலிருந்து இந்த விஷயம் வெளியாகிறது. ஹிட்லருக்கு பீதி உண்டாகியிருந்ததை அவன் வெளிப்படையாகக் காட்டினுன். ஹிட்லரின் உணர்ச்சி எப்படியிருந்தபோதிலும் அச்சுநாட்டினர் அசைக்கமுடியாதவர்கள் போல் வெளித்தோற்றம் இருக்கும்படி அவன் காட்டவேண்டியிருந்தது. இதனுல்தான் ஐரோப்பாவில் உள்ள அச்சுநாட்டுக் கூட்டாளிகள் யுனைடெட் ஸ்டேட்ஸின் பேரில் போர் தொடுக்கவேண்டிய அவசியமான நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

ஆனுல் ஜெர்மன் பிரசார இலாகா, அச்சுநாடுகள் ஏகோபித்து வேலைசெய்து வருகின்றனவென்றும், ஒருநாடு மற்ருெரு நாட்டுடன் நம்பிக்கொண்டிருக்கிறதென்றும் வாதித்துவருகிறது. அச்சுநாடுகள் அசைக்கமுடியாமல் இருக்கின்றன என்றும், அதன் கூட்டாளிகள் பரஸ்பர நம்பிக்கையுடன் ஏகோபித்து நடக்கின்றன என்றும், ஜெர்மன் பிரசாரத்தில் விவரிக்கப்படுகிறது. ஆனுல் உண்மையென்னவென்ருல் ஜெர்மனியும், ஜப்பானும் தனித்தனியான லக்ஷியங்களைக் குறித்து அதாவது உலகம்பூராவும் தன் ஆதிக்கத்திற்கு வரக்கூடிய சாம்ராஜ்யம் வேண்டுமென்று ஒவ்வொரு நாடும் வீணுன எண்ணங்கள்கொண்டு தனிப்பட்ட ஓனுய்கள் மாதிரி சுயநலம் பாராட்டி வேலைசெய்கின்றன.

---

## சைனுவின் ஐந்து வருஷச் சோதனை.

(ஜான் மாக்டோனுல்டு எழுதியது.)

இனிமேல் ஜப்பானியரிடமிருந்து சமாதானத்தைக்கோரி யாராவது வந்தால் அவன் கொலை செய்யப்படுவான் என்று சயாங்கை-ஷெக் சொன்னுர். இதுவே சீனரின் உணர்ச்சியைத் தெரிவிக்கிறது. "சைனுவிலிருந்து எல்லா ஜப்பானிய சிப்பாயும் விரட்டப்படும்வரை சமாதானம் கிடையாது" என்றும் யுத்தத்தின் ஆருவது வருஷ ஆரம்பத்தில் சீனத்தலைவர் சொன்னுர்.

1937-ல் ஒரு எச்சரிக்கையும் இல்லாமல் சைனு-ஜப்பானிய யுத்தம் ஆரம்பமானதும் சைனுவின் கிழக்கு பாகங்களையும், வடக்கு பாகங்களையும் ஜப்பானியர் பிடித்துக்கொண்டுவந்தனர். பீபிங, டீன்ஸ்டின், ஷாங்கெய், நான்கிங் போன்ற நகரங்கள் அவ்வருஷம் டிஸம்பர் மாதத்தினுள் எதிரி வசப்பட்டன. அதற்கு அடுத்த வருஷத்தில் தெற்கு பாகமும், கடற்கரை நகரங்களும் எதிரி வசமாயின. ஆனுல்

இந்த சமயங்களிலெல்லாம் கடுமையான யுத்தமும் நேர்ந்தது. எதிரி அதிக எண்ணிக்கையையும், முஸ்தீப்பையும் கொண்டிருந்தான். சீனர்கள் அப்பேற்பட்டவர்களை எதிர்த்துச் சண்டை செய்தனர்.

## முதல் சமாதான பிரஸ்தாபம்.

1937 டிஸம்பர் 13-ல் நான்கிங் நகரைப்பிடித்துக்கொண்டதும் முதல்தடவை ஜப்பானியர் சமாதானப்பேச்சைத் துவக்கினர்கள். ஆனால் அது சீனர்களால் மறுதளிக்கப்பட்டது. நான்கிங் நகரில் ஏராள ஜப்பானியத் துருப்புகள் இருந்தது சீனர்களுக்குப் பிடிக்கவில்லை. இத்துருப்புகளை விரட்டவேண்டு மென்றே சீனர்கள் நினைத்தனர்.

1938 அக்டோபரில் கான்டனைப்பிடித்தபிறகு ஜப்பானியரின் முன்னேற்றம் மும்மரமாக இல்லை. சைனாவின் பல பாகங்கள் ஜப்பானியரின் வசமிருந்தாலும், அங்கெல்லாம் முக்கிய நகரங்களையும், இருப்புப்பாதைகளையும்தான் வசப்படுத்தி வைத்திருந்தனர். மற்ற பாகங்களிலிருந்து சீனர்கள் கொரில்லாச்சண்டையைச் செய்துவந்தனர். இவ்விதச் சண்டையில் சீனர்கள் சமர்த்தர்கள். போக்குவரவு ரஸ்தாக்களும், ரயில்வே மார்க்கங்களும், ரயில் வண்டிகளும் தாக்கப்பட்டன. சாமான்களேற்றப்பட்ட வண்டிகள் பிடிக்கப்பட்டன.

எதிரியின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் சமயங்களில் சீனர்கள் எதிர்த்துச் சண்டை செய்யாமல் எதிரியின் பலக் குறைவான நிலைகளைப்பார்த்துத் தாக்குவார்கள். பின்வாங்கவேண்டியிருந்தால் மிகவும் மெதுவாகப் பின்வாங்குவார்கள. எதிரி மற்றொரு பகுதியில் பலப்படுத்தும்போது, குறைந்த பலமுள்ள பிரதேசங்களை சீனர்கள் தாக்குவார்கள். இவ்விதமாகத்தான் சீனர்கள் எதிரிகளிடமிருந்து நகரங்களைப் பிடிப்பது.

## எதிரி தடையுற்றான்.

இம்மாதிரியான சீனத்தந்திரங்களால் எதிரியின் முன்னேற்றம் தடைபெற்றிருக்கிறது. தங்களுடைய சைனியங்களை அந்த அவகாசத்தினுள் சீனர்கள் பலப்படுத்திக்கொள்ளுகின்றனர். யுத்தம் ஆரம்பித்தகாலத்தில் இருந்ததைவிட தற்சமயத்தில் சீனர்களின் பலம் அதிகமாகவேயிருக்கிறது. நேசநாடுகளிடமிருந்து கிடைக்கும் ஆயுத உதவியால் மேலும் சைனியத்திற்குப் பலம் செய்யப்படுகிறது.

ஐந்து வருஷ காலமாக சைனா இதர நாடுகளிடமிருந்து பலவிதமான உதவியைப் பெற்றிருந்தாலும் யுத்தரங்கத்தில் ரத்தத்தைச்சிந்தி சண்டையிடுவது சீனர்கள்தான். 1941 டிஸம்பர் மாதத்திற்குமுன் நேசநாடுகள் கடன்கொடுத்தும், குத்தகைக்கடன் மசோதாப்படிக்கு யுத்த சாமான்களை அனுப்பியும் வந்தன. சைனாவிலேயே பல யுத்த சாமான்களைச் செய்யும் தொழிற்சாலைகள் அமைந்திருக்கின்றன. அவைகளைக்கொண்டு சிறிதளவு ஆயுதங்களைச்செய்து சைனியத்திற்கு முஸ்தீப்பு கொடுக்கப்படுகிறது.

சைனாவின் துறைமுகங்களெல்லாம் எதிரிவசமடைந்திருப்பதால் வெளிநாட்டு ஸப்ளைகளை வேறு மார்க்கங்களில் பெறவேண்டிவந்தது. முதலாவதான மார்க்கம் பர்மா ரஸ்தா ஜப்பானியர் பர்மாவை ஆக்கிரமித்துக்கொண்டதால் நேசநாடுகள் இந்த ரஸ்தாவை உபயோகிக்க முடியவில்லை. திபேத், ஸாமர்கண்டு மார்க்கங்கள் மற்றவை. சென்ற வருஷத்தில் 35,000 டன் சாமான்கள் ருஷ்யாவிலிருந்து கன்ஸு, ஷென்ஸி மாகாணங்களின் வழியாக சைனாவிற்கு வந்தன. இவைகளெல்லாவற்றிலும் விமான மார்க்கம்தான் மிக உபயோகமுள்ளதாக இருக்கிறது. சுமார் 7-டன் இடையுள்ள சைனிய சாமான்களை ஏற்றிக்கொண்டு அமெரிக்க போக்குவரவு விமானங்கள் இந்தியாவிலிருந்து குன்மிங்கிற்கு சிலமணி நேரங்களில் சென்றுவிடும்.

### நேச நாடுகளுக்கு உதவி.

1941 டிஸம்பரில் பிரிடனும் அமெரிக்காவும் ஜப்பான் பேரில் சண்டையைத் துவக்கியதும் சைனு கொஞ்சமும் தயங்காமல் தனது படைகளை நேசதேசங்களின் உதவிக்குக் கொடுத்தது. பேர்ல் துறைமுகத்தையும், மலேயாவையும் ஜப்பானியர் தாக்கியதால் ஹாங்காங் தனியே பிரிக்கப்பட்டது. ஏராளமான சிரமங்களிருந்த போதிலும் ஹாங்காங்கிலிருக்கும் நேசதேசப்படைகளின் உதவிக்கு சீனத் துருப்புகள் சென்றன. பிறகு பர்மா சண்டையின் போதும், பிரிடிஷ் துருப்புகளுடனும், இந்தியத் துருப்புகளுடனும் சீனர்கள் சேர்ந்துநின்று சண்டை செய்தனர்.

(A. V. G.) அமெரிக்க வாலண்டியர் (குரூப்) படை இந்தச் சந்தர்ப்பங்களில் தோன்றியது ஒரு விசேஷம். இது இந்தியாவில் இருக்கும் அமெரிக்க விமானப் படையைச் சேர்ந்தது. இவைகளுக்கு "பறக்கும் புலிகள்" என்று பெயர். பர்மா ரஸ்தாவை இவர்கள் காப்பாற்றும்போது தங்களுக்கு ஒரு விமான நஷ்டம் ஏற்பட்டபோது, ஜப்பானியரின் 22 விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன.

சீன நகரங்களைத் தாக்கும்போது ஜப்பானியர்கள் 70,000 சீன மக்களைக் கொன்றனர். 1,00,000 பேர்கள் காயமடைந்தனர். 1939-ல் தான் கடுமையான தாக்குதல் நேர்ந்தது. அதில் 2,613 தாக்குதல்கள் செய்யப்பட்டன. 28,184 பேர் இறந்தனர். 31,094 பேர் காயமடைந்தனர். சுங்கிங்கில் முதல் தாக்குதல் 1939 மே 3, 4 தேதிகளில் நடைபெற்றது. அதில் 10,000 பேர் இறந்தனர். அதற்குப்பிறகு இரண்டு வருஷங்கள் கழித்து நடந்த தாக்குதலில் முன்போலவே ஜப்பானிய விமானங்கள் வந்து தாக்கியதில் ஐந்துபேர்தான் பொதுமக்கள் இறந்தனர். இடைக்காலத்தில் சுங்கிங்கில் பாதுகாப்பு ஸ்தலங்கள் சுரங்கங்களிலும், மலைகளிலும் செய்யப்பட்டன. ஆகவே சுங்கிங் ஒரு பத்திரமான இடமென்று சொல்லலாம். இருந்தாலும் அங்கே அமைதிக்குறைவும் இருக்கிறது.

20-வது நூற்றுண்டின் ஆரம்பத்தில் இருந்தமாதிரி தற்போதய சைனு இல்லை. ஆக்கிரமண நாடுகளை எதிர்த்து நிற்பதில் சைனு முதலில் இருக்கிறது. சைனுவிற்கு ஒரு தலைவர்தான், ஒரு அரசாங்கம்தான், ஒரு உணர்ச்சிதான், ஒரு லக்ஷியம்தான்—ஜப்பானியரை விரட்டவேணுடுமென்பதுதான். பிறகு புனருத்தாரண வேலை துவங்கும்.

---

# மத்தியக் கிழக்குக்கு ஹிட்லர் பாய எத்தனிப்பது.

# இறுதியில் பிரிடன் வெற்றியடையும் என்ற நம்பிக்கையால் துருக்கி நடுநிலைமை வகிக்கிறது.

(லியோனுர்ட் கிர்ஷன் என்பவர் எழுதியது).

நவீன பத்திரிகையின் நிருபர் ஒரு சமயம் ஒரு விஷயத்தைப்பற்றி எழுதி அதை தபாலில் சேர்த்து விடுகிருர். அது தலைமை காரியாலயத்திற்கு சேரும் அவகாசத்திற்குள் நிலைமை முற்றிலும் மாறி விடுகிறது. அதனுல் அவர் எழுத ஆரம்பித்த சமயத்தில் இருந்த நிலைமை, அதுபோய் சேர்ந்தவுடன் தான் நினைத்தபடி முடிந்திருக்கவாகாதா என்று எண்ணவேண்டியதாயிருக்கிறது. இவ்விதமாக அநேக தபால்கள் மூலம் அனுப்பிய விஷயங்கள் எதிர் பார்த்ததற்கு விரோதமாக நடந்திருக்கின்றன.

லிபியா யுத்த நிலைமையைப்பற்றி நான் என் துருக்கி சிநேகிதர்களுடன் கலந்து பேசிக்கொண்டிருந்தேன். இப்பொழுது துருக்கியின் நிலைமையைப்பற்றி எழுதிய பொழுது அவர்கள் நான் விவாதித்த விஷயத்தைப்பற்றி நினைப்பரர்களா என்று ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்தேன். லிபியாவிலிருந்து துக்ககரமான செய்தி ஆங்காராவுக்கு வந்ததும், எங்களுக்கு உண்மையில் வருத்தம் ஏற்பட்டது. துருக்கியின் நிலைமையைப்பற்றி தெரிந்துகொள்ள இன்று நான் தினசரி பத்திரிகையை படிக்கும்பொழுது லிபியாவைப்பற்றி B. பேலி ரிவ்கி அடே (Falih Rifki Atay) என்பவர் எழுதிய வியாசத்தின் தலையங்கத்தைப் பார்த்தேன். அது பின்வருமாறு :

"பிரிடிஷ் மக்கள் தலைமுறை தத்துவமாகக் கொண்டிருக்கும் கொள்கை என்னவென்ருல், தோல்வியை மறைக்க எத்தனிக்காதே. எவ்வளவு ஆபத்தான நிலையை அடைந்தாலும் தைரியத்தைக் கைவிடாதே," என்பதுதான்.

## டொப்ருக் வீழ்ச்சி.

சென்ற வாரத்தில் ஜெர்மனி ஆக்கிரிமித்த பால்கன் நாடுகளிலிருந்து வந்த ஒருவரை சந்தித்தேன. அவர் அப்பொழுதுதான் வந்திறங்கினர். யுத்தத்தில் அச்சு நாடுகள் இறுதியில் தோல்வியேதான் அடையும் என்று என்னிடம் சொன்னர். இதற்குமுன் அவர் ஒரு அரசியல் வாதி. அவ்வள்வு பெரிய மனுஷர் சொன்ன வார்த்தைகள் என்மனதில் உண்மையென்று பதிந்தது. துர் அதிர்ஷ்ட வசமாக டொப்ருக் வீழ்ந்தது. நாங்கள் இருவரும் சாப்பாட்டுக் கிளப்பில் ஒரு அறையில் பி. பி. ஸி. ஒலிபரப்பில் டொப்ருக் முடிவைப்பற்றிக் கேட்டோம். ஒரு நிமிஷம்வரை பிரமித்துப்போய் வாய்பேசாமல் நின்ருேம். பிறகு நான் ரேடியோவை நிறுத்திவிட்டு என் சிநேகிதனிடம் இச்செய்தியை எப்படி வெளியிடுவது என்று சற்று ஆலோசித்துக்கொண்டிருந்தேன். நான் விஷயத்தை வெளியிடவேண்டிய அவசியமே ஏற்படவில்லை. என் அறையில் ஏராளமான யுத்தப் படங்கள் தொங்கவிட்டிருந்தேன். அதில் ஒன்றை அவர் வெகு கூர்மையாக கவனித்து வந்தார். சிறிது நேரம் கழித்து, "பிரிடிஷ் சாம்ராஜ்யம், யுனைடெட் ஸ்டேட்ஸ், ருஷ்யா இன்னும் மற்ற நடுநிலை நாடுகள் இவைகளின் விஸ்தீர்ணத்தையும், மூன்று அச்சு நாட்டு வல்லரசுகளின் நாடுகள், அவர்கள் தாத்காலிகமாக ஆக்கிரமித்த பிரதேசங்கள் இவைகளின் விஸ்தீர்ணத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அச்சு நாடுகள் மிக மிகச் சிறியவையேயாகும். அதனல் அந்நிய நாட்டு ஒலிபரப்புகளைக் கேட்கவேண்டாம் என்று பிரிடிஷ் அரசாங்கம் வற்புறுத்தி வருவது நியாயம்தான் என்று புலப்படுகிறது. நீ இச்செய்தியைக் கேட்டு கலவரமடைந்தாற்போல் தோன்றுகிறது. எனக்கு மனம் நிம்மதியாக இருக்கிறது. இவ்வித தோல்வியெல்லாம் தாத்காலிகமானவைதான். ஏனென்ருல் ஜெர்மானியரும் அவர்கள் சகாக்களும் நிச்சயமாக இந்த யுத்தத்தில் தோல்வியடைவார்கள்" என்று சொன்னர். அதுமுதற்கொண்டு என் மனது நிம்மதியாகவும், சந்தோஷமாகவும் இருந்தது.

துருக்கியில் சாதாரண மனிதனுக்கும் இச்செய்தி திடுக்கிடச்செய்திருக்கும். சென்ற ஒரு வருஷகாலமாக டொப்ருக் அதிக பலமானகோட்டை, அதற்கு அழிவே கிடையாதென்று அவன் நம்பியிருந்தான். 48 மணி நேரத்திற்குள் அப்பட்டணம் எதிரி வசமாய் விட்டது என்ற செய்தி அவனுக்குப் பிரமையை உண்டாக்கி விட்டது. இப்பொழுது அவன் கொஞ்சம், கொஞ்சமாக மனதை தைரியப்படுத்திக்கொண்டு வருகிருன். பால்கன் நாடுகளிலிருந்து வந்த என்னுடைய சிநேகிதனைப்போலவும், பேலி ரிவ்கி அடே என்பவரைப்போலவும் இப்பொழுது அபிப்பிராயங்கொண்டு வருகிருன்.

## பிரிடன் நிச்சயமாக வெற்றியடையும்.

ரோமல் இன்னும் எகிப்தைக் கைப்பற்றிக்கொள்ள முடியவில்லை. எகிப்தின் உள் நாட்டில் அநேக மர்மஸ்தானங்கள் இருக்கின்றன. அவைகள் இதுவரை

தாக்கப்படவேயில்லை. இன்னும் அவ்விடங்களைப் பலப்படுத்திக்கொள்ள போதுமான அவகாசம் இருக்கிறது. பெர்லினில் ராணுவ கலாசாலையில் யுத்த தந்திர போதகராயிருந்த ரோமலுக்கும்கூட அவ்விடங்களை வெகு சுலபமாகத் தாக்கிவிட முடியாது. டொப்ருக் விழுவதற்குமுன் துருக்கி மந்திரி சபையில் ஒரு மெம்பருடன் நான் சம்பாஷித்தேன் அப்பொழுது லிபியா யுத்தத்தைப்பற்றி விவாதம் ஏற்பட்டது. அப்படையெடுப்பில் நேசநாடுகள் வெற்றியடைவதைப் பற்றி ஏதாவது சந்தேகமிருக்கிறதாவென்றும், எகிப்து ஆபத்துக்குள்ளாகி யிருப்பதாக அவர் எண்ணியிருக்கிறாரா என்றும் நான் அம்மந்திரியைக் கேட்டேன் "துருக்கி நிருபர்கள் அனுப்பும் செய்திகளிலிருந்து நாம் பயப்படவேண்டிய அவசியமே கிடையாதென்று தெரிகிறது. யார் அதிக விஸ்தீர்ணமுள்ள மணல் பிரதேசத்தைக் கைப்பற்றினால்தான் என்னவாயிற்று? முக்கிய மர்மஸ்தானங்கள் தாக்கப்படாமல் பலமாக காபந்து செய்யப்படும் வரையில் யாதொரு பயமும் வேண்டியதில்லை," என்று சொன்னார். மேலும் ஜெர்மானியர் ஒரு நாளும் ஸுயெஸ் கால்வாயை அடையப்போவதில்லை என்றும் பூரா நம்பிக்கையுடன் வெளியிட்டார்.

யுத்தம் தீவிரமாக நடந்து கொண்டிருக்கும்பொழுது வெற்றி, தோல்வியைப்பற்றி நிர்ணயிப்பது முடியாத காரியம். ஏதேனும் ஒரு போர்முனையில் மட்டில் கெடுதலான சம்பவங்கள் நேரிட்டு நேசநாடுகளுக்குத் தோல்வி ஏற்படலாம். இதைவிட எவ்வளவு மோசமான சம்பவம் ஏற்பட்டபோதிலும், துருக்கி ஜனங்கள் மனம் அதைரியப்பட மாட்டார்கள் என்பது திண்ணம். "பிரான்ஸ் தோல்வியடைந்து, ருஷ்யா யுத்தத்தில் சேராமல் பிரிடன் மட்டில் தனிமையில் யுத்தம் புரிந்து வந்ததில் அதற்கு தோல்விகள் நேரிட்டு, கவலைக்கிடமான சந்தர்ப்பங்களிலும் பிரிடன் இறுதியில் வெற்றிபெற சக்தி வாய்ந்திருக்கிறது என்பதில் நாங்கள் சந்தேகம் கொள்ளவில்லை. நாஸி யுத்த யந்திரத்தை எதிர்த்து அப்பொழுது பிரிடன் தனிமையில் நின்று கடும்போர் புரிந்தது. ஆனால் இப்பொழுது நேசநாடுகளின் உதவி பெற்றிருக்கும் பிரிடனுக்கு இறுதியில் ஏற்படக்கூடிய வெற்றியைப்பற்றி நாம் ஏன் சந்தேகிக்கவேண்டும்?" என்று அங்குள்ள ஒரு உத்தியோகஸ்தர் என்னிடம் சொன்னார்.

இவ்விஷயத்தைப் பற்றி சுருக்கமாக மேலே குறிப்பிடப் பட்டிருக்கிறது. இதற்குமுன் ஒரு வருஷகாலத்திற்கு மேலேயே தனிமையில் நின்று கடும்போர் புரிந்த பிரிடனின் பலத்தை துருக்கியர்கள் ஒருக்காலும் குறைத்து மதிப்பிட முடியாது. இறுதியில் ஏற்படும் முடிவைப்பற்றி இப்பொழுது ஏன் சந்தேகிக்க வேண்டும்?.

# புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

1942— மணி.

## பிரஸங்கம் 105—(2-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| ஜூலை | ...25, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலே | 6.30 |
| | 26, ஞாயிற்றுக்கிழமை. | திருவப்பூர் ... | ,, | 5.30 |
| | | வயலோகம் ... | ,, | 6.00 |
| | | குடுமியாமலே ... | ,, | 6.30 |
| | 27, திங்கட்கிழமை ... | நச்சாந்துபட்டி ... | ,, | 6.00 |
| | | விராச்சிலே ... | ,, | 6.30 |
| | 28, செவ்வாய்க்கிழமை | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலே | 10.15 |
| | | நல்லூர் ... | மாலே | 6.00 |
| | | மண்டையூர் ... | ,, | 6.30 |
| | 29, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலே | 10.00 |
| | | ராணி பெண்பாடசாலே... | ,, | 10.15 |
| | | காலேஜ் தமிழ் பிராஞ்சு ஸ்கூல். | ,, | 10.15 |
| | | வெங்களூர் ... | மாலே | 6.00 |
| | | கோனுபட்டு ... | ,, | 6.30 |
| | 30, வியாழக்கிழமை ... | பனேயபட்டி ... | ,, | 6.00 |
| | | ராங்கியம் ... | ,, | 6.30 |
| | 31, வெள்ளிக்கிழமை... | கொடும்பாளூர் ... | ,, | 6.00 |
| | | விராலிமலே ... | ,, | 6.30 |

## பிரஸங்கம் 106—(3-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| ஆகஸ்டு | ... 1, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலே | 6.30 |
| | 2, ஞாயிற்றுக்கிழமை. | ஆலங்குடி ... | ,, | 6.00 |
| | | கோட்டைக்காடு ... | ,, | 6.30 |
| | 3, திங்கட்கிழமை ... | அன்னவாசல் ... | ,, | 6.00 |
| | | கீழக்குரிச்சி ... | ,, | 6.30 |
| | 4, செவ்வாய்க்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலே | 10.15 |
| | | ராமச்சந்திரபுரம் ... | மாலே | 6.00 |
| | | ராயவரம் ... | ,, | 6.30 |
| | 5, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம்... | காலே | 10.00 |
| | | ராணி பெண்பாடசாலே ... | ,, | 10.15 |
| | | காலேஜ் தமிழ் (பிராஞ்சு ஸ்கூல்) } | ,, | 10.15 |
| | | பொ. புதுப்பட்டி ... | மாலே | 6.00 |
| | | வேந்தம்பட்டி ... | ,, | 6.30 |
| | 6, வியாழக்கிழமை ... | மழையூர் ... | ,, | 6.00 |
| | | கரம்பக்குடி ... | ,, | 6.30 |
| | 7, வெள்ளிக்கிழமை... | வாளரமாணிக்கம் ... | ,, | 6.00 |
| | | ஏம்பல் ... | ,, | 6.30 |

புதுக்கோட்டை யுத்த முன்னணி பிரசார கோஷ்டியார்கள் பிற்பகலில் கீழ்கண்ட இடங்களுக்கு வருவார்கள். பாண்டு வாசித்துக்கொண்டு, படங்கள் காண்பித்து, துண்டு பத்திரிகைகள் கொடுத்து, பிரசாரம் செய்வார்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| சனிக்கிழமை | ... | 25— 7—42 | ... | திருமயம். |
| ஞாயிற்றுக்கிழமை | ... | 26— 7—42 | ... | ஏம்பல். |
| திங்கட்கிழமை | ... | 27— 7—42 | ... | அரிமளம். |
| செவ்வாய்க்கிழமை | ... | 28— 7—42 | ... | கோனாபட்டு. |
| புதன்கிழமை | ... | 29— 7—42 | ... | ராயவரம். |
| வியாழக்கிழமை | ... | 30— 7—42 | ... | குழிபிரை. |
| வெள்ளிக்கிழமை | ... | 31— 7—42 | ... | பாப்பாபட்டி. |
| சனிக்கிழமை | ... | 1— 8—42 | ... | பொன்னமராவதி. |
| ஞாயிற்றுக்கிழமை | ... | 2— 8—42 | ... | மருதன்கோன்விடுதி. |
| திங்கட்கிழமை | ... | 3— 8—42 | ... | விராலிமலை. |
| செவ்வாய்க்கிழமை | ... | 4— 8—42 | ... | வடகாடு. |
| வியாழக்கிழமை | ... | 6— 8—42 | ... | கீழாநிலை. |
| வெள்ளிக்கிழமை | ... | 7— 8—42 | ... | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—26-7-42.